பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 03 வியாழக்கிழமை (19.08.2004) தொலைபேசி - 2223378 ஒலி 244

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# ஜனாதிபதி சந்திரிகாவின் மிரட்டல் யுத்தத்திற்கே வழிவகுக்கும்!

## கொழும்பு அரசியல் வட்டாரங்கள் எச்சரிக்கை

(நமது நிருபர்)

**நாட்டில் ஸ்திர நிலைக்கு பங்கம் ஏற்பட்டால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அரச படைகளை அணிவகுத்துச் செல்லுமாறு உத்தரவிடுவேன் என்ற முழக்கல் தொனியிலான ஜனாதிபதி சந்திரிகாவின் மிரட்டல் நாட்டில் யுத்தத்திற்கே வழிவகுக்கும் என்று, கொழும்பு அரசியல் வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.**

நாட்டில் அமைதி சமாதான முயற்சிகள் தொடர்ந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் நாட்டின் ஜனாதிபதி பொறுப்பற்றவகையில் அதிகார மமதையில் கருத்துக்களை வெளியிடுவது யுத்தத்தீயை மீண்டும் தோற்றுவிக்கும் நடவடிக்கையாகவே அமையுமென்று அவ்வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாட்டுச் செய்தி ஊடகமான 'யுனைட்ரட் பிறஸ் இன்ரநஷனல்' என்ற செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய விசேட பேட்டியால், புலிகளைச் சீண்டிப்பார்க்கும் வகையில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அரச படைகள் அணிவகுத்துச்சென்று, நாட்டின் உறுதித்தன்மையை பாதுகாக்கத் தான் உத்தரவிடுவேன் என்று மிகவும் கடுமையான தொனியில் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தகைய ஆவேசத்தையும் சினத்தையும் ஏற்படுத்தும் பேட்டிகள், கருத்துக்கள் சமாதானத்தை அடியோடு அழித்துவிடுமென்று கருத்து வெளியிட்ட அரசியல் அவதானிகள் ஜனாதிபதி சந்திரிகா சமாதான காலத்தில் அதனை ஊக்குவிக்கும் வகையில் பொறுப்புணர்வுடன் கருத்துக்களை வெளியிடவேண்டுமென்றும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போலி அடையாள அட்டையுடன் பெண்கள் இருவர் கைது

(வவுனியா)

போலி அடையாள அட்டையைக் காட்டி ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியைக் கடக்க முற்பட்ட இரு பெண்களை வவுனியாப் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்கள் இருவரும் நேற்று வவுனியா நீதிமன்றில் நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்,

முல்லைத்தீவைச் சேர்ந்த ஆசிரியை ஒருவரும் சுவிஸ் நாட்டிலிருந்து வந்த ஒரு பெண்ணுமே போலி அடையாள அட்டை பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரையும் நீதிவான் பிணையில் செல்ல அனுமதித்தார். (ச-13)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அனைவரும் முன்வரவேண்டும்

### புதிய மல்வத்தபீட மகாநாயக்கர் வேண்டுகோள்

(கொழும்பு)

பௌத்த மதத்தினர் உட்பட நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினரும் ஒருபொது இணக்கப்பாட்டிற்கு வந்து, நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரவேண்டும். இவ்வாறு மல்வத்த உயர்பீடத்தின் 26 ஆவது மகாநாயக்க தேரர் அதிவண தீபோத்துவாவ ஸ்ரீ சித்தாத்த தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு சில குழுக்கள் தங்களது ஒத்துழைப்பை வழங்க மறுப்பதால், இந்தப் பிரச்சினை நீண்ட காலம் இழுபட்டுச் செல்கிறது. இதைத்

ளிடையே நிலவும் பிரிவுகளைப் போக்கவும், நாட்டுப்புறப் பகுதிகளிலும் கிராமங்களிலும் சேவையிலீடுபடும் பௌத்த பிக்குகளின் வசதி வாய்ப்பற்ற நிலைமைகளை சீராக்கவும் முதலில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியம் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ச)

## முல்லைக்கடலில் பயணித்த றோலர் தொடர்பான கண்காணிப்புக்குழுவின் விசாரணை ஆரம்பம்

முல்லைத்தீவு கடற்பரப்பில் பயணித்த றோலர் தொடர்பான விசாரணயை இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்லட் ஹொக்லண்ட் ஆரம்பித்துள்ளார்.

குறிப்பிட்ட றோலரில் இருந்து இறக்கப்பட்டதாக கருதப்படும் பொருட்கள் குறித்த ஆய்வினை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமையினாலேயே தாம் விசாரணையை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சந்தேகத்திற்கிடமான அந்த றோலரை இராணுவத்தினர் அவதானித்தபோது அதிலிருந்த பொருட்கள் தொடர்பான விடயம் எதுவும் தமக்குத் தெரியாது என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மட்டக்களப்பு புதுக்குடியிருப்புக் கிராமத்தில் பொலிஸ் இராணுவம் இணைந்து

## ரிசாத் பதியுதீன், மஜீத் மீண்டும் கட்சியுடன் இணைய முடிவு

ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட ரிசாத் பதியுதீன் மற்றும்

காலம் இழுபட்டுச் செல்கிறது. இதைத் தீர்க்க முழு நாடுமே முன்வந்தால் மட்டுமே முடியும். ஆகவே, நாட்டின் அனைத்துத் தரப்பினரும் இணங்கிவந்து, சமாதானத் தீர்வுக்காக உழைக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மதமாற்றுத் தடைச் சட்டம் தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில், மதம் மாறும்படி ஒருவரைக் கட்டாயப்படுத்துவது குற்றமாக இருந்தாலும், மதமாற்றத்தை விரும்பும் ஒருவரைத் தடுப்பது அடிப்படை மனித உரிமைக்கு எதிரானதுதான். இப்பிரச்சினைக்கான தீர்வு யாரையும் பாதிக்காமல், கௌரவமான முறையில் மேற்கொள்ளப்படவேண்டும்.

நாட்டின் இனப்பிரச்சனைக்கும் மதமாற்றத் தடைச் சட்டத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பௌத்த சமூகம், பௌத்த மதத்திலும் பௌத்த அமைப்பிலும் காணப்படும் அதைவிட முக்கிய பிரச்சினைகளை முதலில் தீர்க்கவும், அதிக கவனமெடுக்கவும் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். குறிப்பாக பௌத்த சங்கங்க


**அன்பு மாணவர்களே! உள்ளே!**

க.பொ.த (சா/த) பரீட்சை மாதிரி வினாத்தாள்

***சமூகக்கல்வியும் வரலாறும் – I***

ஆக்கம் : N.S.சங்கர் B.A

(சிறப்பு புவியியல்)


# நேற்று வீடுவீடாகச் சோதனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள புதுக்குடியிருப்பு கிராமத்தில் நேற்று இராணுவத்தினரும், பொலிஸாரும் கூட்டாக தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதிகாலை 5 மணி முதல் நண்பகல் 12 மணிவரை மேற்படி கிராமத்தை சுற்றி வளைத்த நூற்றிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும், பொலிஸாரும் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடத்தினர். தங்களுடைய வீடுகளுக்கு இராணுவத்துடன் வந்த பொலிஸார் வீடுகளைத் துருவித் துருவி தேடுதல் நடத்தியதாக அக் கிராம மக்கள் தெரிவித்தனர். வீடுகளில் சட்டவிரோத ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவல்களையடுத்தே இந்தத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பெற்றோலிய கூ.தாபனம் தனியார் மயமாகாது

## ஜனாதிபதி தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் உறுதி

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின்போதே ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கினார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சுசில்பிரேம் ஜெயந்த, அலவி மௌலான, மஹிந்தானந்த அலுக்கமகே, குமாரவெல்கம ஆகியோரும் கலந்துகொண்டனர். உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்தமையினாலேயே நாமும் எரிபொருட்களின் விலையை அதிகரிக்க நேரிட்டதாக் ஜனாதிபதி தெரிவித்தார்.

நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கு கூட்டுத்தாபனத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு புதிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும்அவர் குறிப்பிட்டார்.(இ-8)

வெளியேற்றப்பட்ட ரிசாத் பதியுதீன் மற்றும் மஜீத் ஆகியோர் மீண்டும் அக்கட்சியுடன் இணைந்து செயற்படமுடிவெடுத்துள்ளனர். இதுதொடர்பான ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவந்தது.

இதன்பயனாக ரிசாத் பதியுதீன், மஜீத் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் தமக்கிடையிலான வேற்றுமைகளை மறந்துசெயற்பட இணக்கம் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-க)

## இறுதித் தீர்வு அடிப்படையில் பேசுக; தேசிய பிக்கு முன்னணி கோரிக்கை

இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் யோசனைகளுடனேயே அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று தேசிய பிக்கு முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் முன்னணியின் பொதுச் செயலாளர் சங்கைக்குரிய ஹலவல்கலசந் திரலோக தேரர் இதனை வற்புறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தனிநாட்டிற்கான அத்திபாரமாகும். எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி மாறியதனால் தேசத்துக்கு விடுக்கபட்ட அச்சுறுத்தல் தற்போது தணிந்துள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.(இ-8)

# தமிழரின் இசைவடிவமான பண்ணிசை

**வலன்ரீனா இளங்கோவன்**
ஆசிரியை
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

*(நேற்றைய தொடர்ச்சி)*

இக்காலத்திலே தமிழர் இசை வடிவாம் பண்ணிசை கோயில்களை மையமாகக் கொண்டு வளர்ந்து வந்தமையை அவதானிக்க முடிகிறது. இவற்றைத் தொகுத்து நோக்கும் போது பல்லவர் காலமானது தமிழர்களது இசை வடிவாம் பண்ணிசையின் பொற்காலமாக விளங்கியமையை அவதானிக்கலாம்.

அடுத்து சோழர்காலத்திலே சோழமன்னன் சிவநெறி போற்றுவோராய்த் தேவாரப் பாடல்களை நாடெங்கிலும் பரவச்செய்தனர். ஆதலால் அவர்களது காலம் தெய்வீக இசையின் வளர்ச்சிக் காலமாயிற்று.

இக்காலப் பேரரசனான இராஜ ராஜ சோழனது கல்வெட்டில் இருந்து தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் நாள்தோறும் திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய நாற்பத்தெட்டுப் பெண்கள் தமிழகத்தில் உள்ள பலகோயில்களிலும் இருந்து குடியேற்றப்பட்டனர் என்று தெரிய வருகிறது. இவர்கள் 'பிடாரர்' என அக்காலத்தில் அழைக்கப்பட்டனர். உடுக்கை, கொட்டி, மத்தளம் என்பன வாசிக்க, இருவர் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்குக் கோயிலை அடுத்து இருப்பிட வசதி அமைத்துக் கொடுக்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் ஒரு வேலி நிலமும் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இராஜராஜன், நம்பியாண்டார் நம்பியினது துணை கொண்டு தேவாரத் திருப்பதிகங்களைத் தேடி எடுத்து, அவற்றைத் தொகைப் படுத்தி, வகைப்படுத்தி பண்ணமைத்து திருமுறைகளாகக் கோயில் தோறும் ஓதும் வண்ணம் ஏற்பாடு செய்தான். இவன் காலத்திலே இருந்த திருமுறைகள் செல்வாக்குப் பெறலாயின, பின்னர், கோயில்களிலும் திருப்பதிகம் ஓதுவோர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் பெற்ற காணி "திருப்பதிகக் காணி" எனப்பட்டது.

இராஜ இராஜ சோழனின் மகனான இராஜேந்திரசோழன் தந்தையை அடியொற்றித் தேவாரப் பண்களை வளர்த்தான். அவன் எழுப்பிய கங்கை கொண்ட சோழேச்சரத்தில் நாள்தோறும் தேவாரம் ஓதப்பட்டு வந்தது. இதற்கென கோயிலினுள் அமைக்கப்பட்ட மண்டபம் "தேவார மண்டபம்" எனப் பெயர் பெற்றது. பின்வந்த சோழ மன்னரும் இவர்களைப் போலவே பண்ணோடு திருமுறைகள் ஓதப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

இரண்டாம் குலோத்துங்க சோழன் பெரியபுராணம் பாடக் காரணமாக இருந்த பேரரசன் இவனுடைய தேவியர்களில் ஒருத்தி "ஏழிசை வல்லவி" எனும் பட்டப் பெயர் கொண்டவள். இசையின் பால் வைத்த பெரு நசை காரணமாகவே "ஏழிசை வல்லவி" எனும் பெருவிருது பெற்ற ஏந்திழையாளை மணந்தனன் என்று கூறுவர். இவன் மூவர் அளிருய திருப்பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதி இசைக் கருவூலமாகப் பாதுகாத்து வந்தான் என்றும் கூறப்படுகிறது.

சோழ மன்னர்களுள் புகழ் பெற்ற குலோத்துங்கன் தனது இசை வல்லமையைக் காட்ட இசைத்தமிழ் நூல் ஒன்றை யாத்தான், இவனையும் இவன் நூலையும் குறித்துக் கலிங்கத்துப் பரணி கூறுமிடத்து,

**"காள முங்களிறும் பெரும் பாணர்தங்**
**கல்வியிற் பிழை கண்டனன் கேட்கவே"** என்று கூறப்படுகிறது. அதாவது, இசைத் தொழில் புரிந்து பாணர்களில் இசையிலும் பிழை கண்டவன் எனின் இவனது இசைப் புலமைப் பெருக்கினை உரைக்கவும் கூடுமோ? இசை நூல் வகுத்து இசைத் தமிழ் பேணியவன் இவன். மேற்குறிப்பிட்ட கலிங்கத்துப்பரணி பாடலின் இந்துப் பண்ணிசை பாடிய பாணர்களும் இக்காலத்தில் இருந்தனர் என்பது புலனாகின்றது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலும் இவன் பின்வந்த சோழமன்னர் காலத்திலும் திருமுறைகள் பாதுகாக்கக் குகைகள் எனப்படும் பாதுகாப்பான இடங்கள் எழுந்தன. திருப்பதிகம் பாடவும், எழுதவும் என விசேட மண்டபங்கள் ஏற்பட்டன. இவை "திருக்கைக் கோட்டி மண்டபம் எனப் பெயர் பெற்றன.

இக்காப்பியமான சீவகசிந்தாமணியின்,

**"பண்கனியப் பருகிப் பயனாடகம்**
**கண் கனியக் கவர்ந்துண்டு"**

எனப் பண்ணிசை பற்றிக் கூறப்படுகிறது. இக்காலத்து பின்கல நிகண்டு, திவாகரம், பிங்கலந்தை, ஆகிய நிகண்டுகளில் ஏழிசைகளின் பெயர்கள் அவற்றின் குறியீடுகள், மாத்திரைகள், 103 பண்களின் பெயர்கள் முதலிய பல குறிப்புகள் கிடைக்கின்றன் காவிய நூலான கம்பராமாயணம் "யாமயாழ் மழலையாழ்" என யாமத்துக் குரிய யாழ் பற்றிக் கூறுகின்றது. இந்த யாழ் ஆனது சங்ககாலத் தமிழரிடையேயும் இருந்து வந்ததை "யாம யாழ் நல்யாழ் நாப்பண்" எனும் மதுரைக் காஞ்சியப் பாடல் மூலம் அறியலாம். இதிலிருந்து பண் பாடும் போது ஒவ்வொரு பொழுதுக்கும் ஒவ்வொரு யாழ் வாசிக்கப்பட்டமை புலனாகும்.

இக்காலத்திலேயே ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களும் நாத முனிவரால் தொகுக்கப்பட்டு பண் வகுக்கப்பட்டது. தேவாரப் பாசுரங்களுக்கு எவ்வாறு பண் வகுக்கப்பட்டு ஆலயங்களில் ஓதப்பட்டு வந்ததோ அவ்வாறே நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களும் விஎப்ஹறு. ஆலயங்களில் பண்ணுடன் ஓதப்பட்டு வந்ததென்பதைப் பாசுரங்களின் வாயிலாக அறியலாம். மேலும் இக்காலத்து நூலான சேக்கிழாரது பெரியபுராணம் தமிழ் இசையின் சிறப்பினை விளக்கிக் காட்டுகிறது. சோழர்காலப் பகுதியில் வடஇந்தியாவில் இருந்து இசைப் புலவர்களில் ஒருவரான சாரங்கதேவர் தமிழ் நாடு வந்து தேவாரத் திருப்பதிகங்களின் பண்களைக் குறிப்பிட்டு, பண்களை நன்கு ஆராய்ந்து அவற்றின் இலக்கணத்தைத் தழுவி "சங்கீத ரத்தினாகரம்" எனும் இசை நூலை வடமொழியில் எழுதினார் என குறிப்பிடப்படுகிறது. இக் காலத்தே கோயில்கள் அதனைச் சார்ந்த மடங்கள், ஆதீனங்கள் என்பவற்றில் ஓதுவார்களை அமர்த்தி பண்ணிசையை வளர்த்ததாகக் கூறப்படுகிறது. இவற்றைத் தொகுத்து நோக்கும் போது இக்காலத்தில் பண்ணிசையானது தமிழரது வளர்ச்சி பெற்ற ஒரு இசை வடிவாக இயங்கி வந்ததை அவதானிக்கலாம்.

*(தொடரும்)*

## வெளிநாட்டு நாணயத் தாள்களை கடத்த முயன்றவர் கைது

85 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத் தாள்களை சட்டவிரோதமாக கடத்த முயன்ற ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையை சுங்க அதிகாரிகள் நேற்று கைது செய்துள்ளனர்.

கொங்கொங்கிற்கு செல்வதற்குத் தயாராக இருந்த இந் நபர், வெளிநாட்டைச் சேர்ந்தவர் என சுங்க அதிகாரிகள் கூறுகின்றார்கள். (ற-க,61)

## ஏவுகணைகள் மீட்பு

(சிலாபம்)

சிலாபம் மாருவல பகுதியில் உள்ள மட்டக்கொட்டுவப் பகுதியில் இருந்த 5 தன்னியக்க எதிர்ப்பு ஏவுகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மீட்கப்பட்ட இவை, அண்மையில் நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்து நொருங்கிய விமானத்தில் இருந்தவையாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவை மேற்படி வாவியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒருவராலேயே மீட்கப்பட்டுள்ளன. (ற-ப)

## பயிற்சிக்குத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களில் 29 பேர் யாழ்.செயலகம் மற்றும் பிரதேச செயலகம் என்பவற்றில் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 7 பேர் யாழ்.செயலகத்துக்கும், மிகுதி 22 பேர் பிரதேச செயலகத்துக்கும் புயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர். பயிற்சியின் போது இவர்களுக்கு சிறு தொகை ஊதியமும் வழங்கப்படவுள்ளது. (ற-5)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய விடுதியும், கைதடி அரசினர் சிறுவர் இல்லத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.அரச அதிபர் செபத்மநாதனால் திறந்து வைக்கப்படவுள்ளது.


திருமதி ரஞ்சனி நடராஜப்பிள்ளையின் தலைமையில் இந் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ற-5)

## இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்க
## அரசாங்கம் இணங்கும் பட்சத்தில்
## உயிரைக் கொடுத்துப் போராடுவோம்
### விமல் வீரவன்ச சூளுரை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் ஜனாதிபதி பேச்சுக்களை ஆரம்பிக்க இணங்கினால், அதை எதிர்த்துப் பேராட மக்களைப் பெருமளவில் ஜே.வி.பி. திரட்டும் என்றும், உயிரைக் கொடுத்து அதற்கெதிராகப் போராடும் என்றும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மாற்றுயோசனைகளின் அடிப்படையில் பிறிதொரு இடைக்கால நிர்வாக அலகை அரசு தயாரிப்பதாகக் கூறுவதை நிராகரித்த விமல்வீரவன்ச, தற்போதைய ஆளும் கட்சியின் பிரதான கூட்டணிக்கட்சி என்ற வகையில் தங்களுடன் கலந்தா



லோசிக்காது அரசு எந்தவொரு திட்டத்தையும் வரைய முடியாது என்றும், அத்தகைய முயற்சிகளை ஜே.வி.பி. கடுமையாக எதிர்த்துப் போராடக் களத்தில் இறங்கும் என்றும் சூளுரைத்துள்ளார்.

மகரகமவில் உள்ள இளைஞர் பேரவையில் கூடியிருந்த இளைய தலைமுறையினருக்கு விரிவுரை வழங்கப் பணித்த போதே விமல் வீரவன்ச இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற - 121)

## ஜனாதிபதி - ஜே.வி.பி சந்திப்பு இறுதி நேரத்தில் ரத்து

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், ஜே.வி.பியினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெறவிருந்த சந்திப்பொன்று பின்னர் இறுதிநேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சுகவீனம் காரணமாக இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ள முடியாதிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்ததையடுத்தே, இந்தச் சந்திப்பு இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டதாக ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதிக்கும், ஜே.வி.பியினருக்கும் இடையில் முரண்பாடுகள் வலுத்து வந்த பின்னர், இரு தரப்பினருக்கும் இடையில் பல சந்திப்புக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதும், அவை தொடர்ச்சியாக ரத்துச் செய்யப்பட்டு வருகின்றன.

கூட்டமைப்பின் தலைமைப் பதவியைத் துறந்தந்தன் பின்னர், இரண்டாவது தடவையாகவும் சந்திப்புக்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ற-121)

## ஜனாதிபதியை உளவு பார்த்ததாக இரு தமிழ் இளைஞர்கள் கைது
### ஒருவர் யாழ்.வாசி

(கண்டி)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடமாட்டத்தை உளவு பார்த்ததாகக் கூறி இரு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மல்வத்த மகாநாயக்க தேரராக தெரிவுசெய்யப்பட்டுள்ள சுமங்கள தேரருக்கு நியமனப்பத்திரம் வழங்கும் வைபவம் கடந்த ஞாயிறன்று மடுல்மடுவ மண்டபத்தில் இடம்பெற்றது.

மேற்படி மண்டபம் கண்டி உடுவத்த கெல காட்டுப்பகுதிக்கு அண்மையாகவும் தலதாமாளிகைக்கு பின்புறமாகவும் அமைந்துள்ளது.

இவ்வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்து கொண்டு தேரரிடம் நியமனப் பத்திரத்தை கையளித்தார்.

இந் நிகழ்வை முன்னிட்டு அப்பகுதியெங்கும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இவ் வைபவம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது விழா மண்டத்திற்கு அருகிலுள்ள பாதுகாப்பு வனப்பகுதியான உடுவத்த காட்டுப்பகுதிக்குள் உட்புக முனைந்த இரு தமிழ் இளைஞர்கள் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்விளைஞர்கள் ஜனாதிபதியின் நடமாட்டங்களை அவதானிப்பதற்காகவே அங்கு வந்திருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து மேற்படி இரு இளைஞர்களையும் கைது செய்த இராணுவத்தினர் கண்டிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸார் இவ்விரு இளைஞர்களையும் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் மற்றவர் கனடாவிலிருந்து வருகை தந்தவர் எனவும் ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (ற-க, 121)

## விஜேவீரவின் இல்லம் தியான கூடமாக மாற்றம்

(கொழும்பு)

ஜே.வி.பி யின் முன்னாள் தலைவர் ரோகண விஜேவீரவின் இல்லம் தியானக் கூடமாக மாற்றியமைக்கப்படவுள்ளதாக இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இவ்வீட்டில் தலைமறைவாக தங்கியிருந்த போதே ரோகண விஜேவீர பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

உலப்பனையில் அமைந்துள்ள இவ் வீடு தற்போது இளைஞர் இல்லமாக அரசாங்கத்தால் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-121)

## இடைக்கால நிர்வாக சபை குறித்த
# அரசின் யோசனையில் காணி, சட்டம்
# பாதுகாப்பு, உள்ளடக்கப்படவில்லை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபை குறித்து அரசினால தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை குறித்த யோசனைகளில் சட்டம், காணி மற்றும் பாதுகாப்பு உள்ளடக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

விடுதலைப் புலிகளின் யோசனைக்கு பதிலான மாற்று யோசனை அரசதரப்பின் சட்ட நிபுணாகளால் தயாாிக்கப்பட்டு, கடந்த வாரம் அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கையின் அரசியல் யாப்புக்கு உட்பட்ட வகையிலேயே அரசின் இந்த யோசனைகள் தயாரிக் கப்பட்டுள்ளதாகவும் அரச வட்டாரங்களில் கசிகின்ற செய்திகளில் இருந்து தெரிய வருகின்றது.

இந்நிலையில், அரசின் வசமிருக்கும் சட்டம், பாதுகாப்பு மற்றும் காணி அதிகாரங்கள் இடைக்கால நிாவாக சபைக்கு வழங்கப்படாது தொடர்ந்தும் மத்திய அரசின் வசமேயிருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, அரசின் மாற்று யோசனையின் பிரகாரம் இடைக்கால நிர்வாக சபையில் விடுதலைப் புலிகளுக்கு அதிகளவு பிரதிநிதித்துவத்தை வழங்குவதுடன், இச் சபையில் அரச மற்றும் முஸ்லிம பிரதிநிதிகளும் உள்ளடக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அததுடன் வடக்கு-கிழக்கு அபிவிருத்தி மற்றும் தெரிவு செய்யப்பட்ட விடயங்களில் வரி வசூலிக்கவும் இடைக்கால நிர்வாக சபைக்கு அதிகாரம் வழங்கப்படும் எனவும் தெரிய வருகின்றது.

இடைக்கால நிர்வாக சபை குறித்த அரசின் இவவரைபு கொழும்புக்கு விரைவில் விஜயம் செய்யவுள்ள நோாவேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபை குறித்த யோசனைகளின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடைபெறவேண்டுமென தமிழீழ அரசியல் துறைப பொறுப்பாளா சு.ப. தமிழ்ச்செல்வன் அண்மைய சந்திப்புக்களில் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ற-க,121)

# தமிழ் இணைய மாநாடு இம்முறை சிங்கப்பூரில்

'நாளைய உலகில் தமிழ்த் தகவல்' தொழில்நுட்பம்' குறித்து விரிவாக விவாதிக்கும் இந்த ஆண்டின் தமிழ் இணைய மாநாடு எதிர்வரும டிசம்பர் மாதம் 11, 12ஆம் திகதிகளில் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இணையத்தில் மிக வேகமாக வளர்ச்சி கண்டு வரும் மொழிகளில் ஒன்று தமிழ். இன்று இணையத்தில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தி செய்யக் கூடிய செயல்களில் அநேகமாக அனைத்தையும் - தமிழ் மொழியைப் பயன்படுத்தியே செய்ய முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வளர்ச்சியை மேம்படுத்தவும், தரப்படுத்தவும் உலகத் தமிழ் தகவல் தொழில் நுடப மன்றம் 1997ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டுதோறும் அனைததுலக மாநாடுகளை நடத்தி வருகிறது. இந்த வரிசையில் இந்த ஆண்டு நடைபெற இருப்பது 7வது தமிழ் இணைய மாநாடு ஆகும்.

இந்த அனைத்துலக மாநாடு சிங்கப்பூால் நடைபெறுவது இது மூன்றாவது முறை. 'நாளைய உலகில் தமிழ்த் தகவல் தொழில்நுட்பம்' என்ற பொருளில் நடைபெற உள்ள இந்த மாநாட்டில், தமிழ்த் தகவல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்ட உள்ளன. பலநாடுகளைச் சேர்ந்த சுமார் 50 கணனி வல்லுநர்களும், முன்னணிக் கணனி நிறுவனங்களைச் சோந்தவாகளும் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

இந்த ஆண்டு நடைபெற உள்ள இந்தத் தமிழ் இணைய மாநாடு இதற்கு முந்தைய மாநாடுகளிலிருந்து சற்று வேறுபட்டிருக்கும். தமிழ்த் தகவல் தொழில்நுட்பத்தின் வர்த்தக, சமூக பயன்பாடுகள் குறித்த விவாதங்களைக் குறைத்துக் கொண்டு, தொழில்நுட்ப அம்சங்களில் இந்த மாநாடு அதிகம் கவனம் செலுத்தும்.

'இரண்டாயிரமாவது ஆண்டு மிகப் பெரிய அளவில் தமிழ் இணைய மாநாட்டை சிங்கப்பூா நடத்தியதைத் தொடாந்து நடைபெற்ற தமிழ் இணைய மாநாடுகள் பொிய அளவிலேயே நடைபெற்று வருகின்றன. தொழில்நுட்பத்தை ஆழ்ந்து பரிசீலிக்கும் விதமாக முதன்முறையாக சிறிய அளவில் இப்போது சிங்கப்பூரில் மாநாடு நடக்க உள்ளது. தமிழ்த் தகவல் தொழில நுட்பத்தின் பயன்பாடுகளை மக்களிடம் எடுத்துச் செல்வது எத்தனை முக்கியமோ அந்த அளவிற்கு மாறிவரும் தொழில் நுட்பங்களில் தமிழுக்கு உாிய இடம் கிடைப்பது குறித்து ஆராய்வதும் முக்கியமானது. (ற)

### கலந்துரையாடல்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான கடற்கரை வீதி ஜி.ரி.சற் நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளது.

இவ்வீதி 35இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுளளது.

இது தொடர்பான கலந்துரையாடலொன்று மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் ஜி.ரி.சற் நிறுவன அதிகாரிகள் கிராம அலுவலர்க்ள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-க,35)

# முள்ளியான் மருந்தகத்தைப் புனரமைக்குமாறு கோரிக்கை

(மருதங்கேணி)

'வடமராட்சி கிழக்கு முள்ளியான மத்திய மருந்தகத்தை புனரமைப்பு செய்து இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்த இம் மத்திய மருந்தகத்தை புனரமைப்புச் செய்வதற்கு எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லையென இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வெற்றிலைக்கேணி, போககறுபபு, சுண்டிக்குளம், முள்ளியான் ஆகிய பிரிவுகளில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் மருத்துவசேவைகளைப் பெறுவதற்கு ஆழியவளை திலீபன் மருத்துவமனை மற்றும் மருதங்கேணி அரசினர் வைத்திய சாலை ஆகியவற்றுக்கே செல்ல வேண்டியுள்ளது.

மிக நீண்டதூரம் பயணம் செய்வதோடு போக்குவரத்து வசதியில்லாத இப் பிரதேசத்திலுள்ள மக்கள் இதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-7,35)

# அப்துல்காதர் கைது குறித்து
# பொலிஸ் ஆ.குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

ஐக்கியதேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் கைது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினாகள் சிலா தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாடு தொடர்பாக கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ், அப்துல் காதரைக் கைதுசெய்தது பிரச்சினையல்ல ஆனால் அவர் கைதுசெய்யப்பட்டமை சட்டத்திற்கு முரணானது.

மேலும் அப்துல் காதரைக் கைதுசெய்த பொலிஸ் பிரிவு தொடர்பாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுககு விரிவாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

(ற-8)

### நினைவு நாள் நிகழ்வுகள்

'சாள்ஸ் அன்ரனி' சிறப்புப் படைத்தளபதி லெப்ரினன் கேணல் ராஜனின் 12ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி நிகழ்வுகள் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக கிழமை பி.ப.4.00மணிக்கு அவரது சொந்த இடமும் வீர மரணமடைந்த இடமுமாகிய மாதகல பிள்ளையார் கோவில் முன்றலில் இடம்பெறவுள்ளன.

இவ அஞ்சலிக்கூட்டமானது விடுதலைப்புலிகளின் பண்டத்தரிபபுக் கோட்டப் பொறுப்பாளா மலையவன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் விடுதலைப புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-58)

## அரச சேவையில் நிலவும்
## சுகாதாரப் பரிசோதகர்
# வெற்றிடங்கள் நிரப்பப்படும்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் மேலும் 300 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் விரைவில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால்சிறி பாலடி சில்வா அறிவித்துள்ளார்.

கல்வப் பொதுத் தராதர உயா தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே இவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இவர்களில் பலர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றவுள்ளார்கள்.

அத்துடன் ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியம் இவர்களுக்கு மோட்டார் சைக்கிளகளை வழங்கவென 30இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ற-க,60)



கொரியாவில் நடைபெற்ற உலக சமாதான மதங்களுக்கிடையிலான சர்வதேச தடகள விளையாட்டு விழாவில் கலந்து பதக்கம் பெற்ற வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் சி.கமலமோகன, ம.சஞ்சவ, செ.தயாளினி ஆகிய வெற்றி வீரர்கள விருது வழங்கி கௌரவிக்கப்படுவதையும் பயிற்றுநர் செ.ரமணன் யாழ். அரச அதிபரால் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## இன்று ஒரு தகவல்

# வேலை வெறியர்கள்

ஒரு பெண்மணி சொன்னார் "என் கணவர் எப்போது பார்ததாலும் வேலை, வேலையென்று அலைகிறார். குடும்பத்தைக் கவனிப்பதற்கே அவருக்கு நேரமில்லை" இப்படிப்பட்ட ஆசாமிகள் மனைவி மக்களுடன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய விடுமுறை நாட்களைக கூட வீணாக்கி விடுவார்கள். அந்த நாட்களிலும் அலுவலகங்களிலேயே கிடப்பார்கள்.

வேலை செய்பவர்களில் இரண்டு வகை உண்டு. ஒரு வகை எப்படியென்றால் வேலையை விருப்பத்து டன் செய்பவர்கள், ஒரு ஈடுபாட்டுடன் செய்பவர்கள். இவர்கள் வேலைப் பிரியர்கள். வேலையே வாழ்க்கை என்று ஓடிக் கொண்டிருப்பவர்கள். இன்னொரு வகை இவர்கள் வேலை வெறியர்கள்.

சரி இந்த வேலை வெறியர்களின் நோக்கம் என்ன தெரியுமா? மற்றவர்கள் நம்மைப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்குள்ளே எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும்."எவ்வளவு கடுமையாக உழைக்கிறார் பார்த்தீர்களா?" என்று எல்லோரும் நினைக்க வேண்டுமாம்.இரண்டாவது காரணம் தனக்குச் சமூகத்தில் ஒரு தகுதி வேண்டும். தனது திறமையை இந்த உலகிற்கு நிருபித்துக் காட்ட வேண்டும் என்ற வெறி. மூன்றாவது காரணம் கவலைகளை மறக்க அது ஒரு வடிகால் .குடும்பத்தில் ஏகப்பட்ட பிரச்சினைகள். அதை மறப்பதற்கும மறைப்பதற்கும் வேலை செய்ய ஆரம்பிக்கின்றார்கள். அதுவே பின்பு ஒரு பழக்கமாகி விடுகிறது.

இந்த வேலை வெறியர்களில் பல ரகம உண்டு. எட்ட முடியாத இலக்கை ஏற்படுத்திக் கொள்வது அதன் பின் அதைப் பிடிக்க எட்டி எட்டிப் பார்ப்பது, முடியாவிட்டால் விழுந்து விழுந்து வேலை செய்வது. இறுதியில் இருதய நோய் வந்து விழுந்து விடுவது. இப்படி ஒரு ரகம். அவரை மாதிரிப் பாட முடியவில்லையே, அவர் மாதிரி எழுத முடியவில்லையே, அவர் மாதிரி நடிக்க முடியவில்லையே என்பனவெல்லாம் இந்த ரகம்.

வேலை வெறியர்களில் இரண்டாவது ரகம் என்ன தெரியுமா? ஒரு வேலையை ஒரு சிறிய தவறு கூட இல்லாமல் பிரமாதமாகச் செய்ய வேண்டும் என்று முடிவு செயது கொண்டு அதற்காகவே விபரங்களைச் சேகரிக்கவெனக் காலத்தை வீணாக்குவது கடைசியில் குழம்பிப்போவது.

சில அலுவலர்கள் ஒரு பெரிய மாநாட்டில் பேசுவதற்காகப் புள்ளிவிபரம் சேகரிப்பார்கள். மற்றைய பணியாளர்களை வாட்டி வதைத்து இரவு பகலாகச் சேகரிப்பார்கள். கடைசியில் மாநாட்டில் பேசும் போது சொதப்பி விடுவார்கள். ஏனென்றால் புள்ளிவிபரம், கருத்து எல்லாம் மனதில் சரியாகப் பதியவைத்திருக்கமாட் டார்கள். அதெல்லாம் பேப்பரில் மட்டும் சாியாக இருக்கும்.

வேலை வெறியர்கள் சாதிப்பது ஒன்றுமில்லை. ஏனென்றால் அவர்களிடம் எந்தவிதமான தனித்துவமுமில்லை. அவர்கள் புதுவிதமாக ஆக்கபூர்வமாக எதையும் சிநதிக்கமாட்டார்கள். புரட்சிகரமான திட்டங்கள் எதுவும் அவர்களிடம் இருக்காது. காலம் முழுதும் தேவையற்ற விடயங்களைச் சேகரிப்பதிலும் அர்த்தமில்லாத வழிமுறைக்ளையும் பழமையான சட்ட திட்டங்களைப் பின்பற்றுவதிலும் கழித்துவிடுவார்கள்.

கணனி போலத்தான் இவர்களிடமும் புள்ளிவிபரங்கள் இருக்கும்.·சுயமாகச் சிந்திக்கவும் தெரியாது. முடிவெடுக்கவும் தெரியாது. சரி இந்த வேலை வெறியர்கள் கடைசியில் என்ன ஆகின்றனா் தெரியுமா? இவர்களின் குடும்ப வாழ்க்கை வீணாய்ப் போகிறது. மனைவியுடன் பேச முடியாது. குழந்தைகளுடன் விளையாட முடியாது. பொழுது போக்காக வெளியில் எங்கும் போகமுடியாது. இப்படிக் கொஞ்ச நாளிலேயே படிப்படியாக குடும்பவாழ்க்கை பாழாகி விடுகிறது.

சரி இந்த சிக்கலிலிருந்து எப்படித் தப்பிக் கொள்வது? இந்த வேலை வெறியர்களுக்கு விடுதலையே கிடையாதா இப்படி ஒரு கேள்விக்கு நியுணர்கள் மூன்று வழிகளைச் சொல்கின்றார்கள். முதலில் உன்னைப் பார். இரண்டாவது உன்னுள்ளே பார். மூன்றாவது உன்னையே தூரத்தில் பார்.

வேலைவெறியர்களுக்கு வேதனை கொடுக்கும் சமாசாரங்கள் மூன்று. ஒன்று தொலைபேசி, இரண்டாவது கடிகாரம், மூன்றாவது நாட்காட்டி இந்த மூன்றும் நமக்கு உதவவேண்டுமே தவிர அதற்கு அடிமையாகி விடக் கூடாது. ஏதாவது ஒரு பொழுது போக்கு இருக்க வேண்டும். இது நேரத்தை வீணாக்காது சக்தியைப் புதுப்பிக்கும். பழைய நண்பர்களையெல்லாம் சந்தித் துப் பேச வேண்டும. புத்தகங்கள் படிக்க வேண்டும் தனிமையை நாட வேண்டும். சும்மா இருக்க வேண்டும். வேலை வெறியர்கள பிறப்பதில்லை உருவாக்கப் படுகிறார் கள்.இது ஒரு வியாதி போலத்தான். இதற்கு மருந்து நம்மிடம் உள்ளது.

அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவர் காலை 10 மணிக்கு அவசர அவசரமாக ஓடிவந்தார். அலுவலகத்தில் புகுந்தார். சிறிது நேரத்தில் அதே வேகத்தில் வெளியே ஓடி வந்தார். "ஒரு முக்கியமான சமாச்சாரத்தை வீட்டில வைத்துவிட்டு வந்து விட்டேன் ஓடிப்போய் எடுத்து வருகிறேன் என்றார். அதற்கு ஏன் ஓடுகிறீகள். உங்கள் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு போகலாமே என்றனர். நான் வீட்டில் விட்டுவிட்டு வந்ததே எனது மோட்டார் சைக்கிளைத் தான். அதைத் தான் எடுத்து வரப் போகிறேன் என்று கூறிவிட்டு அவசரமாக ஓடினார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மதமாற்றத் தடைச்சட்டம் குறித்து கத்தோலிக்க ஆயர்கள் அதிருப்தி

(கொழும்பு)

கத்தோலிக்க ஆயர்கள் ஒன்றிணைந்து கடந்த திங்கட் கிழமை வெளியிட்ட அறிக்கையில், அமுலாக்கும்படி அழுத்தம் கொடுக்கப்படும் மதமாற்றத் தடைச்சட்டம் குறித்த சரத்தின், ஒரு பகுதியையே தாம் முழுமையாக எதிர்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வறுமையிலும நோயிலும் குடும்பப் பிரச்சினைகளிலும் அல்லலுறும் அப்பாவி மக்களுக்கு பல்வேறு சேவைகளையும் அடிப்படை வசதிகளையும் வழங்கி வரும் கிறிஸ்தவ நிறுவனங்கள், இத் தடைச் சட்டத்தால் மிகவும் அதிக சிரமங்களை எதிர்நோக்கும்.

இத்தகைய ஒரு சட்டம் அமுலுக்கு வரும் பட்சத்தில், வேறு மதத்தைச் சேர்ந்தவர்களைத் திருமணம் செய்து கொள்வதில் குழப்பம், குழந்தைகளை எந்த மதத்தில் வளர்பபது என்பதில் குழப்பம், காதல் திருமணத்தில் குழப்பம், தாம விரும்பும் மதத்தில் தாமாக விரும்பி இணைந்து கொளவதற்குத் தடை என்று ஏராளமான சட்டப் பிரச்சினைகளை அனைத்து மதத்தினரும் எதிர்நோக்க வேண்டிய குழப்ப நிலை உருவாகும்.

மதத் தடைச் சட்டம் என்பது அடிப்படை மனித உரிமைகளையும சர்வதேச விதிகளையும் மீறும் ஒரு சட்டமாகும். ஒருவர் விரும்பாதவிடத்து, அவரைக்,கட்டாயப்படுத்தியோ அல்லது அழுத்தம் கொடுத்தோ அல்லது வேறு காரணங்களைக் காட்டியோ மதமாற்றம் செய்ய முற்படுவதைத் தடை செய்யும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை வரவேற்கிறோம்.

ஆனால், தாங்களாக விரும்பினால் கூட, அதைத் தடை செய்யக்கூடிய சட்டமொன்றை அமுலுக்குக் கொண்டு வருவது, அனைத்து மதங்களுக்கும் தீமையையே விளைவிக்கக் கூடியதென்றும், அது அடிப்படை மனித உரிமைக்கு எதிரானது என்றும் அக்கடிதத்தில் அவர்கள் வலி யுறுத்தியுள்ளனர்.

ஏற்கனவே பௌத்த பீடாதிபதிகளின் சங்கம் பரிந்துரை செய்தது போன்று, அனைத்து மதங்களின் பிரதிநிதிகளையும உள்ளடக்கிய ஒரு பல்மத உயர்மட்ட சபையொன்றை உருவாக்கி அதன் ஒரு அங்கமாக சட்டநிபுணர்களையும் உள்வாங்கி, இத்தகைய கட்டாய மதமாற்றத்தைத் தவிர்க்க முயற்சிப்பதே சிறந்த மார்க்கமாக இருக்கும்.

இது குறித்து மனித உரிமையை மதிக்கும் அனைத்து மக்களும், ஆர்வலர்களும், அறிஞர்களும் இத்தகைய மதமாற்றத் தடைச் சட்டத்தை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டும் என அவ்வறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

(ற)

# நாட்டு மக்களின் வாழ்க்கை நலனில் அரசுக்கு எதுவித அக்கறையுமில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மக்களின் வாழ்க்கைச் செலவு மிக வேகமாக அதிகரித்துச் செல்கின்றது. மக்கள் மத்தியில் யுத்தம் தொடர்பான அசசமும் இன்று ஏற்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய அரசாங்கம் இவற்றைக் கவனத்தில் கொள்ளாமல் தனது அரசியல இலாபங்களையே கருத்திற் கொண்டு செயற்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில உரையாற்றுகையிலேயே அவ்இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அங்கு அவர்தொடர்ந்தும் உரையாற்றுகையில் நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் பெரிதும் வரட்சியால் பாதிகக்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர் களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள் ளாமல் வாக்காளர் அட்டை குறித்த விடயத்தைப் பேசுவ திலேயே அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது.

மககளின் குறைபாடுகள் குறித்தோ அவர்களின் நிலைமைகள் குறித்தோ அரசாங்கத்துக்கு எந்தவிதமான கவலையும் இருப்பதாகத் தெரியவில்லை. மீண்டுமொரு யுத்தம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்திலேயே மக்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர்.

2002,2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மக்களுடன் இணைந்து நலிவடைந்து போயிருந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியது. அவ்வாறு அன்றைய அ்ரசாங்கத்தால் கட்டியெழுப்பப்பட்ட நாட்டின் பொருளாதார செயற்பாடுகளின் சாதகமான விளைவுகளை நாட்டு மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டியது ஆட்சிக்கு வந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்.

ஆனால் இவற்றைப்பற்றி கவலைப்படாமல் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும், ஜே.வி.பியும் ஒன்றுக்கொன்று எதிரான கருத்துக்களையும் அறிக்கைகளையும் வெளியிட்ட வண்ணமுள்ளன எனத் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் அப்துல் காதர் சட்டவிரோதமாக கைது செய்யபபட்டமை குறித்தும் ஆராயப்பட்டது.

அததுடன்,பிரதிம்பாதுகாப்பு அமைச்சருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் தெரியாமல் மேற்கொள்ளப்பட்ட முன்னாள் அமைச்சர் அப்துல் காதரின் கைது தொடர்பாக கடுமையான நடவடிககைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் மேற்படி பாராளுமறகுழுக் கூட்டத்தின்போது தீரமானிக்கப்பட்டது. (ற-121,8)

## இராசி பலன்

19.08.2004

(ஆவணி 03 ,வியாழக்கிழமை )

திருதியை மு.ப. 08.14 மணிவரை

உத்தரம் மு.ப. 11.31 மணிவரை

இராகுகாலம். 01.35 - 3.05 மணிவரை

சுபநேரம் 7.35 - 9.05 மணிவரை .

நாகசதுர்த்தி விரதம்

**மேடம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், சத்துரு ஜெயம், தொழில் விருத்தி.

**இடபம்**
வியாபார சிந்தை, அஜீரணக் கோளாறு, மனக் கவலை, காரிய இடையூறு.

**மிதுனம்**
மனச்சஞ்சலம், தனவிரயம், முயற்சி தாமதம், புதிய சிந்தை.

**கடகம்**
நற்கீர்த்தி, தேகசௌக்கியம், மாதர் நட்பு, காரிய அனுகூலம்.

**சிங்கம்**
போசனசுகக் குறைவு, அதிக செலவு, மனோசங்கடம், எடுத்த கருமங்கள் தாமதமாகும்.

**கன்னி**
சயனசுகம், வெகுமானம், தெய்வசிந்தை, சிந்தனை மிகுதி.

**துலாம்**
சோம்பல்நிலை, மனப்பதற்றம், உறவினர் எதிர்ப்பு, காரிய தாமதம்.

**விருச்சிகம்**
நண்பர்கள் சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, தனதானிய சேர்க்கை, தொழில் நன்மை..

**தனுசு**
இஷ்டசித்தி, தேக ஆரோக்கியம், பிரபுத்தனம், சரீரப் பிரயாசை.

**மகரம்**
நிர்பந்திக்கப்படல், எதிர்பாராத செலவு, குடும்பக் கவலை, ரோகநிலை.

**கும்பம்**
மனக்கவலை, பொருள்விரயம், சரீரபீடை, வாகன பயம்.

**மீனம்**
மனோ தைரியம், தொழில்விருத்தி, காரியசித்தி, பணவருவாய்.

\- வளவன்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

## நாவல திறந்த பல்கலைக்கழகத்தின்

# கல்வி சாரா ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம்

(கொழும்பு)


தற்போது நடைபெற்று வரும் திறந்த பல்கலைக்கழக கல்வசார் ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவத்து நேற்றைய தினம் நாவலவிலுள்ள திறந்த பல்கலைக் கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

போதனையாளர்களுக்கான பதவியுயர்வு தொடர்பான திட்டமொன்றை அமுல் செய்யுமாறு கோரி போதனையாளர்கள் நடத்தி வரும் வேலை நிறுத்தத்தினால் திறந்த பல்கலைக் கழகத்தினதும் அதன் 22 பிராந்தியமையங்களினதும் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

இது தொடர்பாகப்பல்கலைககழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவுடன் கடந்த திங்களன்றும் போதனையாளர்கள் சங்க்ம் பேச்சுக்களை நடத்தியது.

இது தொடர்பாக சங்கத்தின் பேச்சாளர் டாக்டர் ஜயந்த வட்டு விதானகே தெரிவிக்கையில் அடிப்படை உரிமையான பதவியுயர்வுக்கான உரிமை தமக்கும் வழங்கப்படல் வேண்டும் என றார். இது தொடர்பாக கடந்த மே மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்ட 842ம் இலக்க சுற்ற நிருபம் ஜூலை 29ம் திகதி மீளப் பெறப்பட்டதையடுத்தே மேர்படி வேலை நிறுத்தம் சங்கத்தினால் ஏறபாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-6)

# வியாழ மாற்றம்



(நேற்றைய தொடர்ச்சி)

## மிதுனம்



**11.02.2005 முதல் 24.03.2005 வரை**

விவசாயம், உணவுப் பொருள் வகை ஈடுபாடு உடையவர்களுக்கு கணிசமான தன ஆதாயம் உண்டாகும். மறைமுக சத்ருக்கள் மனமாற்றம் கொள்வர். சிலர் இப்போது அயல்நாட்டு வாணிபத்தில் முழுவேகம் உடையவர்களாக இருப்பர். அரசியல், அரசாங்க வகை பெரிய மனிதர்கள், முக்கியஸதர்கள் உங்கள் பெரும் முயற்சிக்கு ஊக்கம் அளிப்பவராக இருப்பர். இதனால் தன நடமாட்டம் தேவைக்கு தக்கபடி உடனுக்குடன் பூர்த்தியாகும்., தொழில் சம்பந்தமான பெரிய மனிதர்களுடன் சேர்ந்து விருந்துண்ப தும் உண்டாகும். வாகனதொழில் உள்ளவர்களுக்கு கணிசமான தன ஆதாயம் இருக்கும்.

குழந்தைகள் வகைக் கல்வி மேன்மை சுகத்தைத் தருவதாக இருக்கும். தூரதேச பிரயாணமும் கூட திடீரென்று உண்டாகும். வேலையாட்கள் இப்போது அமைப்பாக வந்துவிடுவர். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகள் தான் இப்போது பயன் உடையதாக இருக்கும். குடும்பத்தில் பெண்கள் வகைக்கு மருத்துவ செலவுகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாதது. பழைய கடன் வகை ஒரு பகுதிப் பளு குறைக்கப்படும். பெண்கள், கலைப்பிரிவு மனிதர்களால் உதவி பெறுவதையும் உண்டாக்கும். மேலும் சில தொழில் வகைக்கு வேண்டிய இயந்திரக் கருவி, வாகனம் போன்றவைகளை வாங்கு வதும் இருக்காது. குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான போக்கு உதயமாகியிருக்கும். உடன்பிறப்பு நெருக்கமாக இருக்கும். அரசியல் மனிதர்கள் மூலம் எதிர் பார்த்த அவரச உதவியை அரசாங்க உயர்மட்ட அதிகாரிகள் மூலமே முடிக்கப் பெறும். வெளியூர் அல்லது வெளி நாட்டுப் பிரயாணமும் இப்போது உங்களுக்கு தொர்ழில் வெற்றியை உண்டாக்கும். சிலர் புண்ணியஸ்தல பிரயாணத்தை ஏற்க வேண்டிய அவசியத்தையும் பெறுவர். ஒரே சீரான போக்கு உடையவர்களாக இருப்பீர்கள். குடும்பத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகிகக் கொண்டேவரும். வழக்கு இருப்பவர்கள் வழக்கத்திற்கு மாறாகச் செலவுகளை உடையவர்களாக இருப்பதால் பாதிப்பு ஏதும் இல்லை. இருவழிக்கு மேல் தனவரவு இருக்கும். கணவன், மனைவி உறவு இனிமையாக இருக்கும். குடும்பத்தில் கௌரவ செலவுகள் அதிகமாகவே இருக்கும். இது சிலருக்கு அரசியல் பதவியினால் வருவதாகவும் இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு மேலிடத்து அதிகாரிகள் மூலம் பாராட்டுக்கள் இருக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 5, 4**

**அனுகூலத் திக்குகள் : தெற்கு, மேற்கு**

**24.03.2005 முதல் 07.05.2005 வரை**

இது மங்கலான நேரம் என்பதால் ஏதும் காரியங்கள் செய்து விடாது. ஆனால் மற்றவருக்கு தலையிட்ட காரி யங்கள் தான் சில வகையில் உஙகளை சிக்கலில் மாட்டிவிட்டுவிட்டது எனலாம். குழந்தைகள் வகை மருத்துவச் செலவுகள் உடையதாக இருக்கின்றன. கூட்டுத் தொழில் உள்ளவர்களுக்கு இது தனப்பெருக்கத்தை உண்டாகும். சிலருக்கு கணவனோ அல்லது மனைவியோ மருத்துவச் சிகிச்சை பெறுவதும் இருக்கும். இதனால் அதிகமான செலவுகளை ஏற்பதும் இருக்கின்றன. போட்டி, பந்தயம், லாட்டரி இந்த ஈடுபாடு பயன்தரத்தக்கதல்ல. விரயம் தான் மிஞ்சும். மாணவர், மாணவியர் சற்று அதிக கவனம் செலுத்தினால் தான் இந்தத் தேர்விலும் தேறமுடியும். சகோதர, சகோதரிகள் வகை அவ்வளவு இணக்கமாக இல்லை. இப்போது அவர்களால் உதவியை பொதுவாகவே எதிர்பார்க்க முடியாது. கூட்டுத்தொழில் உள்ளவர்களுக்கு நன்றாகவே இருக்கும். அரசாங்க மனிதர்களால் எதிர்பார்க்கப்படும் எழுத்து வகை நன்மைகள் நெருங்கிவருவது போல் தான் இருக்கும். ஆனால் முடிவுக்கு வராது. ஆடல், பாடல், சினிமாத்துறை தொழில் உள்ளவர்களுக்கு ஸ்தம்பித நிலை அகன்று படிப்படியே உயர்வு உண்டாகும். எழுத்து மூலம் வருவாயைப் பெறுவேருக்கு நிலைமை சீர் அடையவில்லை அலைச்சல்தான் கூடுதலாக இருக்கும். குடும்பத்தில் முணு முணுப்பு இருந்துகொண்டே தான் இருக்கும். மாணவ, மாணவியர்களுக்கு மிதமான நேரம்தான். என்வே கவனித்துப் படிக்க வேண்டும். கூட்டுத் தொழில் உள்ளவர்களுக்கு நல்ல போக்கு இருக்கும். குடும்ப வகைக்கு. நாகரிக பொருட்கள் வாங்குவது, நல்ல செலவுகளைக் கொடுப்பதும் குறிப்பிடத்தக்கது. கடன், வழக்கு வகைகள் கட்டுப்பட்டே இருக்கும். இக்காலப் பிற்பகுதி பெண்களுக்கு பெருமைப்படும் அளவு தான் நல்ல பலன்கள் இருக்கின்றன. புது உடைகள், பெருமைப்படும் ஆபரண சித்தி போன்றவைகள்

அரசியல் மனிதர்களுக்கு அடுத்தடுத்து பிரயாணங்களும் அலைச்சலும் இருந்து கொண்டே இருக்கும். மாணவ, மாணவியருக்கு கல்வி திருப்பதியாக இருக்கும். மேலும் இக்காலம் தொழில வகையில் சற்று அலைச்சல் அதிகமாக இருக்கும். சில காரியங்களை முடிப்பதில் தாமத நிலை தவிர்க்க முடியாமல் இருக்கும். இதற்குக் காரணம் மூன்றாவது மனிதர்களின் போட்டியும், பொறாமையுமே. இதனால மற்றவர் மீது கோபப்படும் போக்கும் அதிகமாக இருக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 4, 7, 8**

**அனுகூலத் திக்குகள் :**

**தென்கிழக்கு, தெற்கு,**

**07.05.2005 முதல் 20.06.2005 வரை**

குரு இக்காலம் பெரும் பகுதி தீய பலன்களைக குறைத்துக் கொள்பவன். தொழில் வழியில் சற்று வேகம் உடையவர்களாக இருப்பீர்கள். சிலருக்கு அடிக்கடி பிரயாணம் இருக்கும். பொறுப்புள்ள மனிதராகக் கருதப்படுவீர்கள். பொது வாழ்வு பிரகாசம் அடையும் சூழ்நிலை வளர்ந்து வருவதை உணரலாம். போட்டி, பந்தயம், விளையாட்டுப் போன்ற ஈடுபாடுகளும் அதிகரிக்கும். குறிப்பாக மாணவ, மாணவியருக்கு பரிசளிக்கும் குருவாக இருக்கிறான். உங்கள் உடல் நலத்தை கவனிக்க வேண்டும். உஷ்ணப்பிணி, இரத்த அழுத்தம் போன்றவைகள் எதிர்பார்த்த அளவு இருக்காது. நாகரிகப் பொருட்கள், வாகனம் போன்றவைகள் குடும்பத்துக்கு சித்தி பெறும். உத்தியோகப் பிரிவினருக்கு எதிர்பாராத இடம்மாற்றல் உத்தரவு வரும். தாய் வழி உறவில் துக்க கருமச் செலவும் இடம் பெறும் காலம் இது. உங்களுக்கு மருந்து, இரசாயனப் பொருட்கள் மூலமே மெத்த ஆதாயம் இருக்கும் என்பதால் அப்படிப்பட்ட வழிமுயற்சி அவசியம். குடுமபத்தில் மிதமான போக்கு இருக்கும். அரசியல் வகையினர் உங்கள் மூலம் பெறும் நன்மைகள் தான் அதிகமாக இருக்கும். இப்போது அவர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகவும் வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் மெத்தனமாக இல்லாமல் பழைய தொழிலைக் கவனிக்க வேண்டும். குடும்பத்தில் படிப்படியே மகிழ்ச்சி உதயமாகும். விவசாயம், தானியம், உணவுப் பொருட்கள் தொழில் செய்பவர்களுக்கு திருப்தியான ஆதாயம் இருக்கும். சிலர் கட்டிட ஒப்பந்தம் செய்வதும் உண்டாகலாம். புத்திர, புத்திரியர்கள் வகைக்கு சுபமுயற்சிகளும் உருப்பெற்றுவரும். கலைததுறையினருக்கு புதிய முயற்சிகள் கைகொடுக்கும்.

அரசாங்க மனிதர்களின் இணைந்த ஒத்துழைப்பு தைரியசாலிகளாக மாற்றும். உங்கள் காரிய சாதனைகளுக்கு அவர்கள் பயன்படுவர். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபநிகழ்சிகள் இடம்பெறுவது, விருந்து கொள்வதும் இருக்கும். அரசியல் வட்டாரத்தினர் மிகவும் நெருக்கமாக இருப்பர். புத்திரியர்கள் கல்வி உயர்வு மன மகிழ்ச்சிக்கு உரியதாக இருக்கும். இதற்கு முக்கிய காரணம மற்றவர்கள் இல்லத்தில் நடக்கும் சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் அவசியத்தால் உண்டாவதே. விருந்து வேடிக்கை நிகழ்ச்சிகளும் இருக்கும். இந்த செலவு ஆண், பெண் இருபிரிவினருக்கும் உண்டாக்கக் கூடியதுதான். தொழிலை பொறுத்தமட்டில் திருப்தியாகவே இருக்கும். தூரதேச கடிதத் தொடர்பு கூட இருக்கும். விவசாயம் செய்பவர்களுக்கு பொருள், உற்பத்தித் தன வருவாய் உண்டாகும். இப்போது தான் இந்த ராசிக்காரர்கள் பழைய கடனை ஓரளவு திரும்பச் செலுத்துபவார்கள்.

**அதிர்ஷ்ட எண்கள் : 2, 3, 8**

**அனுகூலத் திக்குகள் :**

**தென் கிழக்கு , மேற்கு**

**20.06.2005 முதல் 03.08.2005 வரை**

உங்கள் முன்னிற்பது நண்பர்கள். இப்போது நல்லபோக்கில் இயங்குவர். உறவினர்கள் கூட அப்படியே. உங்கள் ஆலோசனை இந்த நேரம் அவர்களுக்கு நோய்க்குத் தக்க சமயத்தில் கொடுக்கும் மருந்தாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. சுபவிஷயம் குறித்து பேசி வந்த நிபந்தனைகள் இப்போது முழு உருவகம் பெற்றுவிடும். இக்காலம் நீங்கள் முடிக்க வேண்டிய வேலையின் பொறுப்புக்கள் அதிகம். நல்ல ஆகாரம், நல்ல உறக்கமும் உண்டாகும். கணவன், மனைவியிடையே எந்தவிதமான கருத்து வேறுபாட்டும் இல்லை. குடும்பச் சொத்து வகையில் இருந்து வந்த நெருக்கடிகள் குறைநது விட்டன. பிரயாணத்தை தள்ளிப் போடவேண்டியிருந்தாலும் அதுவழி ஆதாயமாகவே முடியும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு திடீர் திருமணம் கூடிவந்துவிடும். கலைத்துறையினருக்கு முக்கியஸ்தர்கள் முதன்மை மனிதர்கள் புதிய முடிவு எடுக்க உதவியாக இருக்கும். அரசாங்க உத்தியோகத்தில் உள்ளவர்ளுக்கு பதவி உயர்வு, இடமாற்றம் போன்ற நன்மைகள், சிலர் இப்போது வெளிநாடு செல்வதும், வெளிநாட்டுக்கு ஏற்றுமதி தொழிலை விரிவுபடுத்துவதும் இருக்கும். கணவன், மனைவி உறவு கனியாக இனிக்கும். இடமாறுதலும் சிலருக்கு முக்கிய அம்சமாக இருக்கும். கடன் வகை ஏதும் பாதிப்பு செய்யமுடியாது. உறவினர் வழியைவிட வெளிவட்டாரம் சிறப்புமிக்கது. சில சமயம் சுகம் அனுபவிப்பதும் போட்டி, பந்தயம், விளையாட்டு, விருந்து கொள்வது போன்ற நன்மைகள் இருக்கின்றன. காதல் கல்யாண சம்பந்தான கடிதத் தொடர்புக்கு ஏற்றகாலம் இது. குடும்பத்தில் திருப்தியான போக்கு இல்லை. சில வகையில் உங்களுக்கு கூட்டு முயற்சி நன்மை தரும். வழக்கு அப்படி யே நிற்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இடமாறுதல் ஏற்படலாம். சொன்ன சொல்லைக் காப்பாற்றி எல்லோருடைய நன்மதிப்பையும் பெறுவீர்கள். காசு கொடுத்து ஆக வேண்டிய காரியங்களை பேச்சு,. புத்தி சாதுரியத்தினால் முடித்து நல்ல பெயரைப் பெறுவீர்கள். நண்பர்கள் எப்போதும் உங்களை சுற்றியே இருப்பார்கள். விருந்தினர்கள் வருகை சுப செலவுகளை உண்டாக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 5, 6, 8**

**அனுகூலத் திக்குகள் : வடக்கு**

**03.08.2005 முதல் 15.09.2005 வரை**

செவ்வாய் சார எல்லை புயல் அடித்து ஓய்ந்தது போல் இருந்தாலும் எதிரிலே நன்மைகளும் இருக்கின்றன. உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது போல் புத்திரர், புத்திரியர்கள் வகையிலும் கவனம செலுத்த வேண்டும். விபத்து, அடிபடுதல் போன்றவைகள் அவர்களுக்கு நிகழலாம். குடும்பத்தில் உள்ள கணவன், மனைவி இடையில் சிறு பூசல் உதயமாகும். இத்தனைக்கு காரணம் மூன்றாவது மனிதரே. பெண்களை முதன்மையாக வைத்து எழும் பிரச்சினை முக்கியம் வாய்ந்தது. எனவே உங்கள் கௌரவத்தில் கவனம் எடுத்துககொள்ள வேண்டும். புத்திரியர்கள் கல்வி சிறப்புடையதாக விளங்கும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சியும் கூட நடக்க வாய்ப்பு இருக்கிறது. விருந்துக்குப் போவது வேடிக்கை நிகழ்ச்சிகளை அனுபவித்தலும் உண்டாகும். தூரதேச செய்தியும் கூட மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும். சிலர் வெளி நாட்டுக்குப்பொருள் ஏற்றமதி செய்வது வகையில் பெருத்த ஆதாயத்தைப் பெறுவர். கலைப்பிரிவினருக்கு கவர்ச்சியான ஒப்பந்தம் உண்டாகும். உங்கள் பழைய நிலையை மாற்றிவிடும். பிரயாணம் முக்கியமாகும். குடும்ப வகைக்கு உரிய நாகரிக பொருள் சேர்க்கை நல்ல ஆபரண சேர்க்கையும் உண்டாகும். கணவன், மனைவி இடையே சுமுகமான போக்கே நிலவி வரும். விருந்துக்குவேண்டி வெளியூர் போவது, வேடிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது போன்ற நிகழ்ச்சிகள் இருக்கத்தான் செய்யும். உத்தியோகப் பிரிவினருக்கு வெளியூர் மாற்றம் உண்டாகும். இதனால் விடுப்பை விரும்புவது, மற்றவருடன் மனபேதம் போன்றவையும் உண்டாகும். பண விஷயத்திலும் நட்பு வகையிலும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நீங்கள் மற்றவர்களிடமும் ஏமாற்றம் அடையும் காலம். கலைப் பிரிவினருக்கு தீட்டி வைத்திருக்கும் திட்டங்கள் சிறப்பாக இருந்தாலும் நடைமுறைக்குக் கொண்டுவர சற்று காலதாமதமாகும். மூன்றாவது மனிதர்களின் குறுக்கீடு உங்களுக்கு தாமதப் போக்கை உண்டாக்குகிறது எனலாம். இதனால் அலைச்சல் இருக்கும். தூக்கம் குறைந்து காணப்படும். மாணவ, மாணவியருக்கு மந்தமான போக்கு உதயமாகும். குரு இப்போது நல்லவனே. தொழிலைக் கவனமாகப் பார்த்து தீமையைக் குறைக்கலாம். புதிய வழியைப் பின்பற்றி சுகத்தைத் தேடுவது தான் நல்லது. தொழில் வகையில் முற்போக்கான சூழ்நிலைதான் இருக்கிறது. எதிரே இருக்கும் புதிய வருடமும் பாதச் சனியுடன் இருக்குமே தவிர பாதிப்புச் செய்யாது. நீங்கள் இப்போது போடும் கடைக்கால் தான் அடுத்த ஆண்டுக்கு கட்டிடம் கட்டி முடிக்க வாய்ப்பாக இருக்கும். அரசாங்க மனிதர்களின் நெருங்கிய தொடர்பு உங்கள் பண்பை உயர்த்தும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 6, 1**

**அனுகூலத் திக்குகள் : வடகிழக்கு**

*(தொடரும்)*

# உங்களுக்கு எப்படி?

# ஐ.ம.சு. கூட்டமைப்பினுள் ஸ்ரீ.சு.க பாரிய சவால்களை எதிர்நோக்குகிறது

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது ஆட்சிப்பீடத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர



முன்னணி அரசாங்கத்திற்குள்ளே உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாரிய சவால்களையும் கடும் எதிர்ப்புக்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கென புதிய கட்டத்தொகுதி ஒன்றை நிறுவுவது தொடர்பாக கட்சியின் செயற்குழுவுக்கு அறிவுறுத்தும் வகையில் இவ்வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு ஜனாதிபதி மேலும் கருத்துத்தெரிவிக்கையில்,

அரசியல் நோக்கங்களுக்காக கூட்டமைப்பு ஒன்று உருவாக்கும் போது இவ்வாறான சவால்கள் ஏற்படும். எனினும் காலத்தையும் அதன் தேவையையும் உணர்ந்து கூட்டமைப்பு உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்குள் தற்காலிகமாக பிரச்சினைகள் தோன்றியுள்ள போதிலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூட்டமைப்பு பிளவுபடவோ அல்லது பிரிந்துசெல்வதற்கான வாய்ப்போ ஏற்படாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை பொறுத்தவரையில் தமது கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக மனிதப் படுகொலைகளை மேற்கொள்ளவில்லை. கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் வறிய மக்களைப் பாதுகாப்பதற்காகப் பல பயனுள்ள நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கிறோம் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(ந-121)

## பரீட்சைக்கான நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில் நுட்பக் பூங்காவின் ஆரம்பக் கணனிக் கற்கை நெறி (**MS.OFFICE**) பக்க வடிவமைப்பு (**DTP**) வன் ·பொருள் தொழில் நுட்பம் (**HardwaeTech-nology**) (5வது பிரிவு) சான்றிதழ் கற்கை நெறிகள் (9வது பிரிவு) மற்றும் **PC Application** (14வது பிரிவு) ஆகிய பயிற்சி நெறிகளுக்கான பரீட்சை நேர அட்டவணை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

மாணவர்கள் நிறுவன அறிவிப்புப் பலகையில் அதனைப் பார்வையிடலாமெனவும் மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் இந்நிறுவனத்தின் இயக்குநர் அறிவித்துள்ளார்.

(ந-7)



இணுவில் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க சிறுவர் பாடசாலையின் விளையாட்டு விழா அண்மையில் சிவகாமி அம்மன் ஆலய முன்றலில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட சிறுவர்களுடன் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

# மக்களின் அன்றாடப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே உடனடித் தேவை

## யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் தெரிவிப்பு

(புங்குடுதீவு)

வடகிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களினது அரசியல் சமூகப் பொருளாதாரத்தை முன்னேற்றுவதே தேசிய எழுச்சிப் பேரவையின் இலக்காகும் என யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற புங்குடுதீவு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

எமது மக்களது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுவது என்பதே உடனடித் தேவையாகக் காணப்படுகின்றது.

இதற்கமைவாகவே அரசாங்கத்திடம் சமர்பித்த இடைக்கால நிர்வாக சபைக்கான முன்மொழிவுகளை முன்வைத்தோம்.

சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையிலேயே தங்களது பணிகளை முன்னெடுக்க முயன்று வருகின்றது. ஆனால் அரசாங்கமோ சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க இழுத்தடிப்புச் செய்துவருகின்றது.

எனவே நாம் அரசியல் சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் பலப் பெறுவது அவசியமாகும். இது தான் மக்கள் அமைப்பாகிய தேசிய எழுச்சிப் பேரவையின்பணியாகக் காணப்படுகின்றது.

எமது மக்களின் வாழ்வு நிலையில் மாற்றமேற்படும்போதுதான் வாழ்க்கையிலும் முன்னேற்றம் ஏற்படும். இவை குறித்த விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்துவதுடன், வாழ்க்கை மேம்பாட்டிற்கான செயற்றிட்டங்களையும் மேற்கொள்ளவேண்டும்.



விழிப்புணர்வு ஏற்படுவது தான் வெற்றிபெறுவதற்கு முதற்படியாகக் காணப்படுகின்றது. தெளிவு ஏற்படும் போது மாற்றம் உருவாகி ஒளிமயமான எதிர்காலம் ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

(ந-121)


# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.1984ற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ்க் குறிப்பிட்ட கிளைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை

## பகிரங்க ஏல விற்பனை

செய்யப்படும்

| | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 01. | பளை | 21.08.2004<br>22.08.2004 | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| 02. | ஊர்காவற்றுறை | 11.09.2004<br>12.09.2004<br>13.09.2004<br>14.09.2004 | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிரதேச முகாமையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/411)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004
## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004


சமூகக்கல்வியும் வரலாறும் I

மணி - 1

ஆக்கம் :
திரு. N.S.சங்கர் B.A. (சிறப்பு) புவியியல்
(புவியியல் ஆசிரியர், மயிலணி, சுன்னாகம்.)

♣ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
♣ தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

♦ கீழ்வரும் தேசப்படத்தைப் பயன்படுத்தி 1-5 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.




1)ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள நகரத்தைக் குறித்துக் காட்டும் எழுத்து எது?
1. D 2. L 3. E 4. F


(2) படத்தில் B என்ற எழுத்தினாற் காட்டப்பட்டுள்ள நதி?
1. ஜெனிசி நதி 2. ஐராவதி நதி
3. சல்வின் நதி 4. குவாங்கோ நதி

(3) போர்மோசா (Formosa strait) தொடுகடலைக் குறிக்கும் எழுத்து எது?
1. A 2. I 3. J 4. K

(4) படத்தில் G என்ற எழுத்தினால் காட்டப்பட்டுள்ள குடாநாடு எது?
1. கம்சாட்காக் குடாநாடு
2. கொரியக் குடாநாடு
3. மலேசியக் குடாநாடு
4. காத்தியாவார்க் குடாநாடு (Kathiawar Peninsula)

(5) 2004ஆம் ஆண்டு யூலை மாத நடுப்பகுதியில் 15வது சர்வதேச எயிட்ஸ் மாநாடு நடைபெற்ற நகரத்தைக் குறிக்கும் எழுத்து?
1. L 2. D 3. C 4. E

♦ தரப்பட்டுள்ள இலங்கைத் தேசப்படத்தைப் பயன்படுத்தி 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




(6) அண்மைக்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றுள்ள A-9 நெடுஞ்சாலையின் இரு அந்தங்களாக அமையும் நகரங்களைச் சரியாகத் தரும் விடை?
1. C, A 2. B,G 3. C,D 4. C,F

(7) இலங்கையில் ஈரச்சுதை ஓவியங்களுக்குப் பிரசித்தி பெற்ற சிகிரியாவைக் குறிக்கும் சரியான விடை?
1. A 2. D 3. E 4. F

(8) படத்தில் H என்ற எழுத்தினாற் காட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கம்?
1. மாதுறுஓயா நீர்த்தேக்கம்
2. றந்தம்பே
3. சேனநாயக்க சமுத்திரம்
4. பராக்கிரம சமுத்திரம்

(9) இலங்கையில் கடலரிப்பின் கடுமையான தாக்கத்தினை அனுபவிக்கும் பிரதேசத்தைக் குறிக்கும் சரியான விடை?
1. P 2. Q 3. R 4. S

(10) படத்தில் x-y என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள கோடு?
1. வட அகலாங்கு $6^0$
2. வட அகலாங்கு $7^0$
3. வட அகலாங்கு $8^0$
4. வட அகலாங்கு $9^0$

(11) புத்தரின் விலா எலும்புத் தாது வைத்து, தேவநம்பியதீச மன்னனால் கட்டுவிக்கப்பட்ட தாதுகோபம்?
1. அபயகிரித் தூபி 2. அம்பஸ்தலத் தூபி 3. தூபராமத்தூபி 4. கிரிவிகாரை

(12) பின்வரும் தூபி வடிவங்களுள் இலங்கையிற் காணப்படாத வடிவம்?
1. நெற்குவியல்வடிவம் 2. நீர்க்குமிழிவடிவம்
3. கோயில்மணிவடிவம் 4. தாமரைவடிவம்

(13) கண்டிச் சிங்கள அரச பரம்பரையின் இறுதி மன்னன்?
1. ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் 2. ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன்
3. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் 4. இராஜாதிராஜசிங்கன்

(14) P-கியூபொயிட் தலைமையிலான தூதுக்குழு வருகை, Q-தந்துரே யுத்தம், R-கன்னொருவ யுத்தம், S-பல்லனை யுத்தம், T- ஹிங்குராங்கத்த உடன்படிக்கை முதலியன இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி ஏற்பட முன்பு நிகழ்ந்த சில முக்கிய நிகழ்வுகளாகும். இவற்றைக் கால ஒழுங்கில் வரிசைப்படுத்தினால் சரியான ஒழுங்கு?
1. QSPTR 2. PQRST 3. QSRTP 4. SQRTP

(15) A-தேசவழமைச்சட்டம், B-சர்வசனவாக்குரிமை, C-சாதிமுறை, D-இராஜகாரியமுறைமை, E-பெருந்தோட்டப்பயிர்ச்செய்கை, F-உரோமன் கத்தோலிக்க சமயம்.
மேலே தரப்பட்டுள்ளவற்றில் ஐரோப்பிய இனத்தவரின் செல்வாக்கின் விளைவாக இலங்கைச் சமூகத்தவரிடம் ஒன்றிணைந்த அம்சங்களை உள்ளடக்கிய விடை?
1. BEF 2. ADE 3. CDF 4. ACF

(16) இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்களின் தொகை?
1. மூன்று 2. நான்கு 3. ஐந்து 4. ஆறு

(17) வயது வந்தோரில் எழுத்தறிவற்ற வீதம் 40 அல்லது அதற்குக் குறைந்த வயதில் இறப்போர் வீதம், அடிப்படைத் தேவைகளைக் குறைந்தளவிலாவது பூர்த்தி செய்ய முடியாத நிலையிலுள்ளோர் வீதம் (சுகாதாரம், தூய குடிநீர், 5வயதிற்குக் குறைந்த குழந்தைகளில் நிறைகுறைந்தோர் வீதம்) ஆகிய குறிகாட்டிகளைப் பயன்படுத்திக் கணிப்பிடப்படும் அபிவிருத்தி சார் அளவீட்டுச் சுட்டெண்?
1. மானிட அபிவிருத்திச் சுட்டெண்
2. மானிட சுதந்திரச் சுட்டெண்
3. மானிட வறுமைச் சுட்டெண்
4. பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்

(18) இலங்கையில் முதலாவது குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது?
1. 1871 2. 1891 3. 1901 4. 1971

(19) மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நீர்ப்பாசன முறை G நீரைப் பெறுவது?
1. கலாவெவவிலிருந்து 2. மல்வத்து ஓயாவிலிருந்து
3. எலகர-மினிப்பே-யோத எலவிலிருந்து 4. யான் ஓயாவிலிருந்து

(20) இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் வர்த்தக நிலுவையைச் சாதகமாக்கிக் கொள்வதற்கு முக்கியமான நடவடிக்கை பின்வருவனவற்றில் எதுவாக அமையும்?
1. நுகர்வுக்கான செலவைக் குறைத்தலும் ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தலும்.
2. ரூபாவின் பெறுமானத்தைக் குறைத்தலும் ஏற்றுமதி வரிகளைக் குறைத்தலும்.
3. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கிடையே வர்த்தகக் கூட்டுக்களை ஏற்படுத்துதல்
4. அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் இருபுடை வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளல்.

(21) ஒவ்வொரு வருடமும் உலக உணவுத் தினமாகக் கொள்ளப்படுவது?
1. மார்ச் 15 2. யூன் 5 3. செப்ரெம்பர் 10 4. ஒக்ரோபர் 16

(22) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் தமது தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு முதற் காரணியாயமைந்தது?
1. உள்நாட்டுக் கைத்தொழிற் பங்காளர்கள் இருந்தமை
2. உவப்பான காலநிலை
3. மலிவானதும் கல்வியறிவு பெற்றதுமான தொழிலாளரைப் பெறக்கூடியதாயிருத்தல்
4. சாத்தியமான மூலப் பொருட் கிடைப்பனவு.

(23) இலங்கையில் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டம் முதன்முதலில் செயற்படுத்தப்பட்ட நிர்வாக மாவட்டம்?
1. பதுளை 2. குருநாகல் 3. அனுராதபுரம் 4. மாத்தறை

(24) பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு உருவாக்கப்பட்டது?
1. 1970 2. 1978 3. 1983 4. 1992

(25) மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கொத்மலை, விக்டோரியா நீர்த்தேக்கத் திட்டங்களுக்கு உதவிய நாடுகள்?
1. சுவீடன்,ஐக்கிய இராச்சியம் 2. ஜேர்மனி, கனடா
3. கனடா, சுவீடன் 4. ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி

(26) இலங்கையில் ஆரம்ப கால வரலாறு தொடர்பாக எது சரியானது?
1. ஆட்சியுரிமையானது சகோதரனிடமிருந்து சகோதரனுக்குச் செல்வதாக அமைந்தது.
2. வைத்திய சேவைகளுக்காக அரச உதவிகள் கிடைக்காமை.
3. தந்தை வழிச் சமுதாயமாகக் காணப்பட்டாலும் பெண்கள் உயர் நிலையில் காணப்பட்டமை
4. கல்வியின் அவசியத்தையறிந்து அரசு அதற்கு உதவியளித்தமை

(27) உலக சுகாதார அமைப்பினதும் (W.H.O), உணவு விவசாய அமைப்பினதும் (F.A.O) தலைமைக் காரியாலயங்கள் நிலையப்படுத்தப்பட்டுள்ளது முறையே
1. பாரிசிலும், ரோமிலும் 2. ஜெனீவாவிலும், பாரிசிலும்
3. நியூயோர்க்கிலும், ஜெனீவாவிலும் 4. ஜெனீவாவிலும், ரோமிலும்

(28) இலங்கையில் மின்வலுவை உண்டாக்குவதில் ஆகக்கூடிய உள்ளாற்றலைக் கொண்டுள்ள மின் நிலையம்?
1. விக்ரோறியா 2. சுன்னாகம் 3. சமனலவெவ 4. களனிதிஸ்ஸ

(29) இலங்கையின் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் H பிரிவில் புதிதாக விருத்தி செய்யப்பட்ட முதலாவது பட்டினம்?
1. மீகொல்லாவ 2. கல்நேவ 3. எப்பாவெல 4. கெக்கிராவ

(30) நேரடிச் சனநாயகம் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது?
1. இலங்கையில் 2. பிரான்சில் 3. கிரேக்கத்தில் 4. கனடாவில்

(31) டொனமூர் ஆட்சியின் கீழ்க் காணப்படாத அரச அதிகாரிகள்?
1. உள்நாட்டுச் செயலாளர் 2. நிதிச்செயலாளர்
3. நீதிச் செயலாளர் 4. அரசுச் செயலாளர்

(32) கண்டி இராட்சியம் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்ட ஆண்டு?
1. 1796 2. 1802 3. 1815 4. 1818

(33) இலங்கைப் பாராளுமன்றத்தில் அங்கத்தவர் தொகை?
1. 224 2. 225 3. 196 4. 29

(34) இலங்கையில் முதியோர் குடித்தொகையின் விகிதாசாரம் துரிதமாக அதிகரிப்பதற்குக் காரணம்?
1. தாழ் இறப்பு வீதமும் உயர் கருவள வீதமும்
2. தாழ் கருவள வீதமும் உயர் இறப்பு வீதமும்
3. சர்வதேச அடிப்படையில் இளைஞர்களின் குடிப்பெயர்வு
4. குறைந்து செல்லும் கருவள வீதமும் குறைந்து செல்லும் இறப்பு வீதமும்

(35) மேல் மகாவலியிலுள்ள மூன்று நீர்த்தேக்கங்களின் பெயர்களைச் சரியாகத் தரும் விடை?
1. ரந்தெனிகல, கொத்மலை, உல்ஹிட்டிய
2. ரந்தெனிகல, விக்ரோறியா, கொத்மலை
3. கொத்மலை, உல்ஹிட்டிய, மாதுறுஓயா
4. கொத்மலை, மாதுறுஓயா, விக்ரோறியா

♦ பின்வரும் அட்டவணையின் உதவியுடன் 36-40 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

| நாடு | பிறப்பில் எதிர் பார்க்கப்படும் ஆயுட்காலம் | மானிட அபிவிருத்தி சுட்டெண் | தலாவருமானம் (அமெரிக்க டொலர்) | வயது வந்தோர் எழுத்தறிவு | ஆண்டுக்கான சனத்தொகை வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|---|
| A | 71.8 | 0.734 | 840 | 91.3 | 1.4 |
| B | 40.1 | 0.196 | 230 | 17.4 | 4.6 |
| C | 72.0 | 0.754 | 6765 | 89.1 | 2.5 |
| D | 55.3 | 0.456 | 450 | 43.2 | 3.9 |
| E | 81.4 | 0.945 | 33500 | 97.8 | 0.4 |
| F | 81.7 | 0.978 | 42400 | 99.0 | 0.1 |

(36) சனத்தொகையில் இயற்கையதிகரிப்பு மிக விரைவானதாக உள்ள நாடுகள்?
1. A,B 2. C,F 3. B,D 4. E,F

(37) மக்களின் கொள்வனவு இயலாற்றல் மிகவுயர்வாகவுள்ள இருநாடுகள்?
1. A,B 2. C,F 3. B,D 4. E,F

(38) சமூக, பொருளாதார விருத்தி சார் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தும் போது முன்னுரிமையளிக்கப்பட வேண்டிய நாடுகள்
1. B,D 2. C,F 3. A,B 4. E,F

(39) சனத்தொகை இரட்டிப்பாகும் காலம் நீண்டதாக அமைந்த நாடு?
1. B 2. F 3. C 4. D

(40) தரப்பட்டுள்ள அட்டவணையில் இலங்கைக்குப் பொருத்தமான தரவுகளைக் குறித்துள்ள எழுத்து?
1. A 2. B 3. E 4. F

(01x40= 40 புள்ளிகள்)

**நாளை, சமூகக்கல்வியும் வரலாற்றுக்குமான பகுதி - I இன் விடையுடன், பகுதி - II இற்கான வினாக்களும் வெளிவரும்.**

# ஜனாதிபதியின் சமாதான வேஷம் சர்வதேசத்தின் நிதியுதவியைப் பெறவே!

## அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்திருக்கும் கருத்து தடைப் பட்டுப் போயுள்ள சமாதான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான சூழலை எட்டும் முயற்சியில் கறைபடிய வைத்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தையை விடுதலைபபுலிகளுடன் ஆரம்பித்து அது முன்னேற்றகரமாக அமையுமானால் தேசியத் தலைவரை நேரடியாகச் சந்திப்பதற்கு விருப்பம தெரிவித்துள்ளதாகக் கூறும் ஜனாதிபதி அவ்வாறு பேச்சுக்கள் அமையாதவிடத்து வன்னிக்கு படையினரை அனுப்பவும் தயங்க மாட்டேன் என தெரிவித்திருப்பது ஜனாதிபதி சந்திரிகாவின் போர் முகத்தை அப்பட்டமாக வெளிக் காட்டுகிறது என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழீழ வீடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பமாக்கி வெற்றிகரமாக முன்னெடுகக வேண்டும் என்பதில் மிகுந்த பற்றுறுதியுடன் உள்ளனர். தமிழ் மக்களும் சமாதானத்தில் அதீத அக்கறையுடன் உள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி பொறுப்பற்ற தனத்தில் கருத்துக்களை தெரிவிப்பது சமாதானப் பாதையில் முட்கள் தூவும் செயலாகும்.

சமாதானத்தில் அதிக அக்கறையுடையவர் போல் சர்வதேச சமூகத்திற்குத் தன்னை அடையாளம் காட்டும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முப்படைகளை எந்நேரத்திலும் உஷார் நிலையில் இருக்குமாறும் அடிக்கடி உத்தரவிடுகின்றார்.

அதுமட்டுமன்றி, ஆயுதக் கொளவனவுக்கான ஒப்பந்தங்களையும் பல நாடுகளுடன் செய்துவருகின்றார்.

எனவே, ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது ஜனாதிபதியின் சமாதான வேஷம் சர்வதேச நாடுகளிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக் கொள்ளும். வரையில் மாத்திரமே நிலைத்திருக்கும் என்பதையே உணர முடிகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சில மாதங்களுக்குள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் பட்டுவிட்டது. ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 3 மாதங்கள் கடந்துவிட்டபோதும் இடை நிறுத்தப்பட்ட சமாதானப்பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் அரசின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாகத் தோல்வி கண்டே வருகின்றன.

இந்நிலைமை, இன்னும் சில மாதங்களுக்குத் தொடருமானால் மீண்டும் ஓர் யுத்தம் ஏற்படும் என்பது உறுதி எனவும் அரசியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளார்கள்.(ற-க, 121)

# சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அரசின் பணிகள் 65 சதவீதம் பூர்த்தி

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளில் 65 சதவீதமானவற்றை அரசாங்கம் பூர்த்தி செய்துவிட்டதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் சனல் நியூஸ் ஏசியா தொலைக்காட்சிக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது குறித்துக் கூறுகையில்,

எஞ்சிய 35 சதவீதமான பணிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளாலேயே நிறைவேற்றப்படவேண்டும். சமாதான நடவடிக்கைகளில் விடுதலைப்புலிகளை ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் பெருமளவு நிதியைச் செலவிட்டிருக்கின்றது.

ஆனால், விடுதலைப் புலிகளோ இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேச அரசு முன்வந்தால் மட்டுமே நாம் சமாதான வழியில் செல்வோம் என்கின்றார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் இவர்களின் இந்தக் கோரிக்கை பெரும் தொல்லை தருவதாகவே கருதுகின்றேன்.

தேசிய விடயம் சம்பந்தமாக பொருளாதார ரீதியில் எனக்குக் கட்டுப்பாடுள்ளது. மக்களிடம் நியாயமான முறையில் நாட்டை ஒப்படைக்கவேண்டும்.

இடைக்கால நிாவாகம் குறித்துப் பேசுவதற்கு முன்னர் இது குறித்த ஒப்பந்தம் ஒன்று செய்ய வேண்டும். ஒப்பந்தம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அதுவும்; மேலதிக அரசாங்கம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்வது போலவே இது குறித்து விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டியிருக்கின்றது என்றும் கிண்டலாகத் தெரிவித்தார்.

(ற-க, 61)

# ஏழரை இலட்சம் ரூபா செலவில் புதிய நூலகம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஏழரை இலட்சம் ரூபா செல்வில் புதிய நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நூலகம் கணனி அறை கொண்ட சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது. இந் நூலகம் எதிர்வரும் 25 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனர் அமைப்பு குழு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-க, 35)

# அந்தணரல்லாத இந்து பூசகர்களுக்கு வதிவிடப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அந்தணரல்லாத இந்து பூசகர்களுக்கான வதிவிடப் பயிற்சி நெறி எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கதிர்காமம் தெய்வாணை அம்மன் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சியினை விஷ்வ ஹிந்து பரிஷத் இலங்கைக் கிளை நிர்வாகமும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்துகின்றன.

கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியில் பயிற்சியாளர் தங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன. பயிற்சியில் பங்கு பற்றுபவர்கள் நேரடியாகக் கதிர்காமம் சென்று தங்களுடைய பயிற்சியினை மேற்கொள்ளலாம்.

இதேவேளை, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து பயிற்சி பெறுபவர்களுக்கான கடிதங்கள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாட்ட அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் திணைக்ளத்தின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் தெரிவித்துள்ளார். (ற-ச)

# வை.கோவின் ஆணவப் பேச்சுக்கு இல. கணேசன் கடும் கண்டனம்

## பொடா சட்டத்திற்கும் ஆதரவு தெரிவிப்பு

(சென்னை)

தான் சென்னைக்கு நடைப் பயணம் சென்று முடிக்கும் போது தமிழக முதல்வராக ஜெயலலிதா இருக்கமாட்டார் என்ற வை.கோவின் ஆணவப் பேச்சுக்கு இல.கணேசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பாரதீய ஜனதாக் கட்சியன் அகில இந்தியச் செயலாளர் இல.கணேசன் நிருபர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளைப் போல நடந்துகொள்ளாமல் நாம் ஒரு நல்ல எதிர்க் கட்சியாக நடந்து வந்துள்ளோம். இனியும் அதுபோலவே நாடாளுமன்றம் முறையாக நடக்க முழு ஒத்துழைப்பையும் கொடுப்போம். மத்திய அமைச்சர் சிபுசோரன் குறித்த விவகாரத்தில் நாடாளுமன்றத்தில் அறிக்கை கேட்டால் நாடு கடந்து சென்று அறிக்கை தருகிறார்கள். நாடாளுமன்றத்திலேயே அறிக்கை கொடுத்திருந்தால் வீண் பிரச்சினைகளைத் தவிர்த்திருக்கலாம்.

நாடாளுமன்றத்தில் பேசும் போது ஆட்சியாளர்களுக்கு நாவடக்கம் வேண்டும். அவைத் தலைவர் நடுநிலையோடு நடந்து கொள் வேண்டும். அப்போதுதான் நாடாளுமன்றம் அமைதியாக நடக்கும். இதை அனைவரும் உணர்ந்து செயற்படவேண்டும்.

தற்போது நடைப்பயணம் மேற்கொண்டுள்ள வை.கோ, 'சென்னையில், தனது நடைப்பயணத்தை முடிக்கும் போது ஜெயலலிதா முதலவராக இருக்கமாட்டார்' என்று கூறி வருகிறார். மேலும் ஜி.கே.வாசன், ராமதாஸ் போன்றவர்களும் தமிழகத்தில் ஆட்சிக் கலைப்பு பற்றி பேசி அறிக்கை விடுத்து வருகின்றனர்.


தங்கள் கூட்டணியில் உள்ளவர்கள் ஒற்றுமையாக இருக்கு வேண்டும் என்பதற்காக இப்படி பேசுகிறார்களா?' என்று தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை தமிழகத்தில் வரும் 2006 இல் தான் தேர்தல் வரும், வரவேண்டும். இதேபோல் மத்திய அரசும் 5 ஆண்டு காலம் ஆட்சி நடத்தவேண்டும்.

பொடா சட்டத்தைப் பொறுத்த வரை மத்திய அரசு விலக்கிக் கொள்ள முடிவு செய்துவிட்டது என்பது தெரிந்தவுடன், இனி நீதி மன்றில் வாதாடிப் பயன் இல்லை என்பதையும் தெரிந்து கொண்டதன் பின் தான் வை.கோ மீதான வழக்கை மாநில அரசு விலக்கிக் கொண்டு விட்டதே தவிர வை.கோ மீது குற்றமில்லை என்று எந்த இடத்திலும மாநில அரசு குறிப்பிடவில்லை.


மதுரை உயர் நீதிமன்றத்தின் கிளை விவகாரத்தில் நீதிமன்றத்தில் வாதாடித் தீர்வுகாணவேண்டுமே தவிர வழக்காட வேண்டியவர்களே வீதிக்கு வந்து போராடுவது வருத்தமாக உள்ளது. என்னைப் பொறுத தவரை மதுரை உயர்நீதிமன்றக் கிளைப் பிரச்சினையில் குடியரசுத் தலைவரின் அறிவிப்பைப் பின் பற்றிச் செயல்படுத்துவதுதான் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையும்.

பொடா சட்டத்தை நீக்க வேண்டியது அவசியமில்லை. பொடாவிலுள்ள சரத்துக்கள் நாட்டின் பாதுபாப்புகக்கு மிகவும் அவசியமாகும். நாட்டின நலம் கருதி இன்னும் கடுமையான சரத்துக்களை சேர்க்க வேண்டும். தலைபபை (பொடா என்ற பெயரை) வேண்டுமானால் மாற்றிக்கொள்ளட்டும்.

பொடா இருந்ததால்தான் நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்தியவர்கள் விரைவில் தண்டிக்கப்பட்டனர். பொடா இல்லாததால்தான் கோவையில் செல்வராஜ் என்ற பொலிஸ் காரர் நடுரோட்டில் கொலை செய்யப் பட்ட சம்பவத்தில் குற்றவாளிகள் தப்பிவிட்டனர். இதை எல்லாம் பொடா சட்டத்தை ரத்து செயய நினைப்பவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (ற)



மூன்று வாரங்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் நாடாளுமன்ற அவைகள் கூடின. அவைக்கு வந்த பிரதமர் மன்மோகன் சிங்கைப் படத்தில் காணலாம்.




# பயங்கர ஆயுதங்களுடன் 10பேர் பொலிஸாரால் கைது

காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள சூணாம்பேட்டில் வெடிகுண்டுகள் மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் ஒரு பெண் உட்பட 10 பேரை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

சூணாம்பேட்டில் கடந்த சனிக் கிழமை நள்ளிரவு இடம்பெற்ற கோஷ்டி மோதலில் வெடிகுண்டு வீசப்பட்டது. இதில் இளைஞர் ஒருவரின் கை துண்டானது.

சூணாம்பேடு காலனி விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆனந்தன், செந்தில். இதில் ஆனந்தன் அமைப்பின் மாவட்டச் செயலர். செந்தில் ஏற்கெனவே நிர்வாகியாக இருந்து விலகிவிட்டார்.

இந் நிலையில் இரு தரப்பினருக்கும் இடையே நீண்டகாலமாக முன் விரோதம் நிலவிவந்தது. அடிக்கடி மோதிக் கொண்டனர். இருவர் மீதும் பல்வேறு வழக்குகள் உள்ளன. ஆனந்தன் தற்போது குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் உள்ளார். செந்திலை சூணாம்பேடு காலனிக்குள் வரக்கூடாது எனக் கூறி ஆனந்தன் தரப்பினர் விரட்டி விட்டதாகக் கூறப்படுகிறது.

செந்தில் மற்றும் அவரது ஆட்கள் சிலர் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு காலனிக்குள் செல்ல முயன்றனர். அப்போது அங்கிருந்த ஆனந்தன் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் அவர்களைத் தடுத்தனர்.

அப்போது இரு தரப்பினருக் குமிடையே மோதல் ஏற்பட்டது. ஆனந்தன் கோஷ்டியினர் நாட்டு வெடிகுண்டு ஒன்றை வீசினர். இதில செநதில் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவரின் கை துண்டிக்கப்பட்டது. செந்தில் உள்ளிட்டோர் தப்பி ஓடி விட்டனர்.


இச் சம்பவம் குறித்து சூணாம்பேடு பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்தனர். இந் நிலையில், திங்கட்கிழமை சூணாம்பேடு காலனியில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் திடீர் சோதனை நடத் தினர்.

இதன்போது வெடிகுண்டு வீச்சு சம்பவம் தொடர்பாக காலனியைச் சேர்ந்த 10 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற)

# மதத் தலைவர்களே தீவிரவாதத்தை தூண்டி விடுகின்றனர் என்கிறார் முஷாரப்

(இஸ்லாமபாத்)

தற்கொலைப் படைத்தாக்குதலுக்கு பாகிஸ்தான் மத கட்சிகள் தடைவிதிக்க வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் பர்வேஷ் முஷராப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



முஷாரப்பைக் கொலை செய்ய கடந்த சில மாதங்களுக்கு முன் பாகிஸ்தானில் தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தப்பட்டது. அதில்,அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். கடந்த மாதம், பாகிஸ்தானின் அடுத்த பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ள சவுகத் அஜிஸ் மீது தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இது தொடர்பாக பாகிஸ்தான் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் முஷாரப் கூறியதாவது,

இஸ்லாமில் தற்கொலைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் பாகிஸ்தானில் தற்கொலைப் படைத்தாக்குதல் தொடர்நதும் நடத்தப்பட்ட வருகிறது. இந்நிலையில் பாகிஸ்தான் மதக் கட்சிகளின் கூட்டணி அமைப்பான முதா ஹிதா மஜ்லிஸ்-இஅமால், தற்கொலைப் படைக்கு ஏன் தடைவிதிக்கவில்லை.

மதத்தின் பெயரால் நடக்கும் வன்முறைச் சம்பவங்களை பாகிஸ்தான் மத கட்சிகள் அங்கீகரிக்கின்றன. தீவிரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதால் பாகிஸ்தான் மக்களை எனக்கு எதிராகத் தூண்டி விடுகின்றன. இஸ்லாமின் பாதுகாவலர்களாகத் தங்களை அழைத்துக் கொள்கின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

(யே)

# சதாம் உறவினர்களுக்கு சுவீடன் அடைக்கலம்

(ஸ்டாக்ஹோம்)

சதாமின் உறவினர்கள் இருவருக்கு சுவீடன் நாடு அடைக்கலம் அளித்துள்ளது.

ஈராக்கில் அமெரிக்கப் படையெடுப்பின் போது தப்பிய அவர்கள், சுவீடன் நாட்டின் ஒருநகரத்தில் பதுங்கியுள்ளனர். அவர்களுக்கு சுவீடன் நாடு அடைக்கலம் கொடுத்துள்ளது என்று அந்த நாட்டுப் பத்திரிகை எஸ்பிரசன் செய்திவெளியிட்டுள்ளது. அவர்கள் இருவரும் ஈராக் இராணுவத்தில் ஜெனரல்களாக பதவி வகித்தவர்ககள். இரண்டு மாதங்க ளுக்கு முன் திக்ரித் நகரில் இருந்து ஜோர்தானுக்கு தப்பி வந்தனர். சதாம் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்காக அவர்களை அமெரிக்கப் படைகள் ஈராக் முழுவதும் தேடிவந்தன.

ஜோர்தானில் இருந்து அவர்கள் சுவீடன் சென்றனர். இச்செய்தியை வெளியிட்ட அப் பத்திரிகை அவர்களது பெயர்களைத் தெரிவிக்கவில்லை.இது பற்றி தங்களுக்குத் தெரியாது என்றும், அடைகலம் கோருபவர்களின் பெயர்களை மறைக்க மாட்டோம் என்றும் சுவீடன் குடியேற்ற அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(யே)

## தீவிரவாதிகளின் அட்டகாசத்தால்

# நேபாளத்தில் போக்குவரத்து ஸ்தம்பிதம்; இயல்பு நிலை பாதிப்பு

(காத்மண்டு)

நேபாளத்தின் தலைநகர் கார்த்மண்டுவிற்கு செல்லக்கூடிய தரை வழிப்பாதைகளில் மாவோத் தீவிரவாதிகள் போக்குவரத்துத் தடைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

தலைநகரில் 1.5 மில்லியன் மக்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில் தீவிரவாதிகளின் இந்த நடவடிக்கையின் காரணமாக தலைநகருக்கு உணவு மற்றும் ஏனைய பொருட்களை விநியோகிக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காத்மண்டுவிற்குச் செல்லும் பிரதான தரை வழிப்பாதைகள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டதாக ரொயிட்டர் செய்தி வெளியிட்டுள்ளது. பிரதான வீதிகள் அனைத்திலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக நேபாள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ப-யே)

# இராணுவத்தினர் பத்திரிகையாளர் ஆகின்றனர்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் இராணுவம் 30 இராணுவ வீரர்களை பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுத்த முன்வந்துள்ளது. தீவிரவாதத்துக்கு எதிரான அரசாங்கத்தின் பிரசார இயக்கத்தைப் பலப்படுத்தவே இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாக இராணுவம் அறிவித்துள்ளது.

தென்பகுதியில் மிண்டனோ தீவின் இராணுவ சிவில் உறவு சேவைக்கான மேஜர் கமால் ஹயுடினி இத்திட்டத்தை அறிமுகம் செய்துள்ளார்.

இந்த இராணுவ வீரர்களுக்கான பத்துநாள் பத்திரிகைத் துறைப் பயிற்சி கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியது. இப்பயிற்சிக்குப் பின்னர் அவர்கள் உள்ளூர் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களில் நியமிக்கப்படுவார்கள்.

(யே)

## WORLD NEWS
## உலக தரிசனம்

## ஈராக்கிய புலனாய்வு அதிகாரி

# ஷியாத் தீவிரவாதிகளால் கைது

## அரேபியத் தொலைக்காட்சி தகவல்

(டோகா)

ஈராக் உளவுத்துறை அதிகாரி ஒஸாமா அப்துல் ஜப்பாரை ஷியாத் தீவிரவாதிகள் பிணையாளியாகப் பிடித்துள்ளதாக அரேபியத் தொலைக்காட்சி அல் ஜஸீரா செய்தி வெளியிட்டுள்ளது.

புனித நகரான நஜாப் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாகவே தீவிரவாதிகள் அவரைக் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உளவுத்துறை அதிகாரி ஜப்பாரின் அருகே முகமூடி அணிந்த தீவிரவாதிகள் இருவர் துப்பாக்கியுடன் நின்றிருக்கும் வீடியோவை அல்-ஜஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பியுள்ளது.

(யே)

# ஈராக்கில் பீரங்கித் தாக்குதல்
# 7 பேர் பலி ; 37 பேர் காயம்

(பக்தாத்)

ஈராக்கில் பீரங்கிக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி 2 குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், 37 பேர் காய மடைந்துள்ளனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள பொலிஸ் நிலையம் அருகே நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றது.

இத்தகவலை, ஈராக சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.காயமடைந்தவர்களில் இருவர் பெண்களா. 35 பேர் ஆடவா. முதலில் கார் குண்டுதான் வெடித்தது என நினைத்தோம். ஏனெனில் ஒரு கட்டடம் மோசமாகச் சேதமுற்றது. இருப்பினும் இது பீரங்கிக் குண்டுத் தாக்குதல்தான் என நிபுணர்கள் கண்டறிந்து முடிவு செய்தனர் என கர்னல் அட்னன் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

(யே)

## ஈராக்கிய
# இராஜதந்திரிகளைச் சந்திக்க ஆன்மீகத் தலைவர் சதார் மறுப்பு

(பக்தாத்)

ஈராக்கின் நஜாப் நகரில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த ஆன்மீகத் தலைவர் மொஹ்ராடா அல்-சதார் ஈராக்கிய இராஜதந்திரிகளை சந்திப்பதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

புனித நகரான நஜாப்பில் இடம்பெற்ற மோதல்களின்போது காயமடைந்த ஆன்மீகத் தலைவரைச் சந்திப்பதற்கு ஈராக்கிய இராஜதந்திரிகள் விருப்பம் தெரிவித்திருந்தபோதும், அமெரிக்கர்களின் ஆதிக்கம் ஈராக்கில் தொடரும் வரை ஈராக்கிய இராஜதந்திரிகளோடு எவ்வித பேச்சுவார்த்தையையும் முன்னெடுக்கப் போவதில்லை என அவர் கூறியுள்ளார்.

(ப-யே)



பாகிஸ்தானில் அண்மையில் நடந்த சுதந்திரதினக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக தலைநகர் இஸ்லாமபாத்தில் நடைபெற்ற ஆடை அணிவகுப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மங்கை

## வடகொரியாவின்
# அணுவாயுத விவகாரம்; பேச்சுக்கள் தொடரும்

(பீக்கிங்)

வடகொரியாவின் அணுவாயுதம் தொடர்பான ஆறு தரப்புப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கும் என தாம் நம்புவதாக சீன அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

வடகொரியாவின் அணுவாயுதம் தொடர்பான பிரச்சினை குறித்து எழுந்துள்ள சர்ச்சைகளால் தற்போதைய பேச்சுவார்த்தை முறுகல் நிலை அடைந்திருந்தபோதும், அது சரியான திசைக்குத் திரும்பும் என சீன வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடகொரியா 2 அணுவாயுதப் பரிசோதனைகளை அண்மையில் மேற்கொண்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டியதை அடுத்தே இந்த முறுகல் நிலை தோன்றியமை குறிப்பிடத்தக்கது.

(ப-யே)




பிலிப்பைன்ஸில் பத்திரிகையாளர்களுக்கு பாதுகாப்பு அவசியம் என்பதை வலியுறுத்தியும் பத்திரிகையாளர் படுகொலையைக் கண்டித்தும் பிலிப்பைன்ஸ் பத்திரிகையாளர்கள் கறுப்பு உடையணிந்து சுலோகங்களை கோஷித்தவாறு மணிலாவிலுள்ள குயிஷன் நகரப் பொலிஸ் முகாமுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# ஹொக்கி அரையிறுதிப் போட்டிக்கு இந்திய அணியின் வாய்ப்பு உயருகிறது

எதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு நேற்று முன்தினம் வெற்றிகரமான நாள். ஆண்கள் ஹொக்கியில் 4:2என்ற கோல் கணக்கில் தென் ஆபிரிக்காவை வீழ்த்தி அரையிறுதிக்கான வாய்ப்பை அதிகரித்துள்ளது இந்திய அணி.




எதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவுக்குப் பதக்க வாய்ப்புகள் அதிகம் உள்ள விளையாட்டுக்களில் ஹொக்கி முக்கியமானது. 'பீ'பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி ஹொலந்திடம் முதல் போட்டியில் 1:3என்ற கோல் கணக்கில் தோற்றது. ஆகவே இனிவரும் போட்டிகளை வென்றே தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தமான ஒரு சூழ் நிலையில் தென் ஆபிரிக்க அணிக்கு எதிராக நேற்று முன்தினம் களமிறங்கியது இந்தியா.

எதென்ஸ் ஹொக்கி அரங்கில் நடந்த இந்தப் போட்டியின் ஆரம்பம் தென்ஆபிரிக்காவின் கைகளில்தான் இருந்தது. ஆட்டத்தின் 8,12வது நிமிடங்களில் கோலடித்து விட்டனர் தென் ஆபிரிக்கர்கள். முதல் பாதியில் அந்த அணி 2:1என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் இந்திய வீரர்கள் ஒரு கோல் அடித்து சமன் செய்யத்தான் முடிந்ததே தவிர ஆதிக்கம் செலுத்த முடியவில்லை.

இறுதி ஐந்து நிமிடங்கள்தான், ஆட்டத்தின் திருப்பு முனை. அதுவும் இறுதி இரண்டு நிமிடங்களில் இந்திய வீரர்கள் மிக அற்புதமாக விளையாடி, அடுத்தடுத்து இரு கோல்கள் அடித்து ஆட்டத்தை தங்கள் கைக்குக் கொண்டுவந்தனர்.

ஆட்டநேர முடிவில் இந்தியா 4:2என்ற கோல் அடிப்படையில் முன்னிலையில் தென் ஆபிரிக்காவை வீழ்த் தியது. அரையிறுதிக்கான வாய்ப்பை இந்த வெற்றி பிரகாசமாக்கியுள்ளது. இனிவரும் போட்டிகளிலும் வெற்றிபெறும் பட்சத்தில் ஹொக்கியிலும் இந்திய அணி சாதிக்கமுடியும்.(ற-7)



ஸ்பைடர் மேனை பார்த்து கட்டடங்கள் மேல் ஏறும் ஆர்வக்கோளாறு உலகில் பலரிடம் உண்டு. அதைப் போலத் தான் இவரும்... எதென்ஸ் ஒலிம்பக்கில் ஸ்பரிங்போர்டு நீச்சல் போட்டிகளை பார்த்துக் கொண்டிருந்த ரசிகர் ஒருவருக்கு திடீரென்று ஒரு ஆசை. நாமும் இது போல் குதித்தால் என்ன என்று... உடனே அதை செயல்படுத்தியும் காட்டி விட்டார். டைவ் அடிச்சா சிக்கல் என்று, கையை விரிச்சபடியே குதிக்கிறார் பாருங்கள்.

# இந்திய கிரிக்கெற் அணி ஆம்ஸ்டர்டாம் பயணம்

நெதர்லாந்தில் நடைபெறவிருக்கும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்காக இந்திய கிரிக்கெற் அணி ஆம்ஸ்டர்டாம் சென்றுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெற் தொடர் நெதர்லாந்தில் உள்ள ஆம்ஸ்டர்டாம் நகரில் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. பங்கேற்கும் மூன்று அணிகளுமே வலுவானவை என்பதால் இந்தத் தொடர் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதில் பங்கேற்பதற்காக சௌரவ் கங்குலி தலைமையிலான இந்திய அணி மும்பையில் இருந்து ஆம்ஸ்டர்டாமுக்கு கடந்த திங்களன்று சென்றிருக்கிறது.

இந்தத் தொடர்பற்றி நிருபர்களுக்கு பேட்டியளித்த கப்டன் கங்குலி,

ஆசியக் கோப்பை ஏமாற்றத்தில் இருந்து நமது வீரர்கள் விடுபட்டு விட்டனர். இத்தொடரில் பங்கேற்கும் மூன்று அணிகளும் பெரிய அணிகள் என்பதால், ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும். அத்துடன், நமது ஆடுகளங்களுடன் ஒபபிடும்போது, அங்கிருப்பது சிறிய மைதானம். ஆகவே, ஆட்டம் இன்னும் அதிரடியூக இருக்கும். இந்தப் போட்டியைப் பொறுத்தவரை, சூழ்நிலைக்கு ஏற்ப ஆட்டத்தை மாற்றிக்கொள்ளுமாறு சச்சினை கேட்டுக் கொண்டிருக்கிறேன். தொடக்க ஆட்டக்காரர்கள் செவாக், சச்சின் இருவருமே அதிரடி வீரர்கள். இருவரில் ஒருவர் 50 ஓவர் முழுதாக நின்று ஆடவேண்டியது அணிக்கு முக்கியம். இந்தத் தொடரை நமது வீரர்கள் தன்னம்பிக்கையுடன் எதிர் கொள்வர் எனத் தான் நம்புவதாகத் தெரிவித்தார்.

(ற-7)

## அபர்ணா வெளியேற்றம்

(எதென்ஸ்)

ஏதென்ஸில் நடைபெறும் 28வ து ஒலிம்பிக், பட்மின்டன் பிரிவில் இந்தியாவின் சார்பில் பங்கேற்ற ஒரே வீராங்கனை அபர்ணா போபட், முதல் சுற்றில தென் ஆபிரிக்க வீராங்கனை மிச்செல் எட்வர்ட்சை வென்று இரண்டாம் சுற்றுக்குள் நுழைந்தார். இரண்டாம் சுற்றில் ஹொலந்தின் மியா அடினாவை எதிர்த்துக் களமிறங்கினார்.

இந்தப் போட்டியின் முதல் செட்டை 11-9 என்ற புள்ளி முன்னிலையில் அபர்ணா கைப்பற்றினார். ஆனால், அடுத்த இரு செட்களையும் அடினா 11-1,11-3 என்ற முன்னில்லையில் கைப்பற்றி, அபர்ணாவை வீழ்த்தினார்.

இதனால் ஒலிம்பிக்கில் அபர்ணா தொடர்ந்து பங்குபற்ற சந்தர்ப்பமில்லாத தால் போட்டிகளிலிருந்து வெளியேறினார். (07)

## ஜோன் ரைட்டின் பதவிக் காலம் மேலும் ஓராண்டு நீடிப்பு

இந்திய கிரிக்கெற் அணியின் பயிற்றுவிப்பாளர் ஜோன் ரைட்டின் ஒப்பந்தத்தை இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையின் செயற்குழு மேலும் ஒரு ஆண்டுக்கு நீடித்துள்ளது.



அதன்படி 2004-2005 பருவ காலம் முழுவதும் அவர் பயிற்றுநராக பணியாற்றுவார். கொல்கத்தாவில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்துக்குப் பின்னர் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

உடற்பயிற்சியாளர், கிரகோரி அலன்கிங், உடலியக்க வல்லுநர் ஆன்ட்ரு லீபஸ் ஆகியோருக்கு 2007ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டிவரை ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வீரர்களின் தகுதி அடிப்படையிலான புதிய சம்பள ஒப்பந்த முறைக்கு இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை அனுமதி அளித்துள்ளது.

புதிய சம்பள அடிப்படையில் ரூ.50,30,20 இலட்சம் எனத் தகுதி அடிப்படையில் 3 பிரிவுகளாக வீரர்களுக்க சம்பளம் வழங்கப்படவுள்ளது.

அதேசமயம், ஆட்டத்தில் விளையாடாத வீரர்களுக்கா சம்பளத்தை 50 இலிருந்து 70 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை சபை ஏற்கவில்லை. (ற-7)

## தொலைக்காட்சி ஒளிபரப்பால் 7 ஆயிரம் கோடி வருமானம்

ஒளிபரபபு மூலம் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு ரூ.7ஆயிரம் கோடி வருவாய் கிடைககும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1984ல் லொஸ் ஏஞ்சல்சில் நடந்த போட்டியில் கிடைத்த வருவாயைவிட இது 5மடங்கு அதிகமானது. போட்டிமுடிவுகளைப் பார்க்க 220 நாடுகளில ரசிகர்கள் தொலைக்காட்சி முன்தான் அமர்ந்திருக்கிறார்கள்.

மொத்தம் 3,500 மணிநேர ஒளிபரப்பில் கிடைக்கும் வருவாயில் பாதி பல்வேறு நாடுகளின் ஒலிம்பிக் கமிட்டிகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும் 49 சதவீதம் தற்போது போட்டியை நடத்தும் ஒலிம்பிக் கமிட் டிக்கு வழங்கப்படும். (07)

## ஒலிம்பிக்கில் இன்று...

கிரேக்கத்தின் தலைநகர் எதென்ஸில் நடைபெற்று வரும் 2004 ஒலிம்பிக் போட்டியின் ஏழாவது நாளான இன்று,

அம்பெறிதல், பட்மின்டன், கூடைப்பந்து, கரபந்தாட்டம் (கடற்கரை), குத்துச்சண்டை, படகோட்டப் போட்டிகள், வாட்போர், ஜிம்னாஸ்டிக்-நடனம், ்கைப்பந்து, ஹொக்கி, ஜூடோ, பட கோட்டப்போட்டிகள், குறி பார்த்துச் சுடல், மென்பந்து, நீச்சல், டென்னிஸ், டேபிள் டென்னிஸ், கரபந்தாட்டம், பளு தூக்கும் போட்டி, வோட்டர் போலோ ஆகிய விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன.

(யே)



அனைவரினதும் ஆவலைத் தூண்டுவது ஜிம்னாஸ்டிக் போட்டி. ஒலிம்பிக்கில் இப் போட்டியின் இறுதி நிகழ்வில் ஜப்பானிய ஜிம்னாஸ்டிக் வீரர் ரேஹீ ஹீரோ ஹஸீமா அனாயாசமாக பரலெல் கம்பங்களிடையே சுழலும் காட்சி.

## விளையாட்டு செய்திகள்

**ATHENS 2004**
**XXVIII OLYMPICS 13-29 AUGUST**
**ஒலிம்பிக் இன்று் 7 தினங்கள்**

# தந்தை வழியே தனயனுக்கும் ஜிம்னாஸ்டிக்கில் தங்கப் பதக்கம்

ஒரு நாடு ஒரு தங்கப்பதக்கம் பெற்றாலே பெருமை. பதக்கம் பெற்றதற்காக அவர் குடும்பத்தினரும் எவ்வளவு சந்தோஷம் அடையவார்கள், தவிர ஒரே குடும்பத்தில் தந்தை பெற்ற தங்கத்தை மகனும் பெற்று வந்திருக்கிறார் என்றால் இன்னும் கேட்கவா வேண்டும்.



எதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்த சாதனை நிகழ்த்தப்படடுள்ளது. ஜப்பான் ஜிம்னாஸ்டிக் வீரர் நயோயா சுக்ககாரா தங்கம் பெற்றுள்ளார். 1968, 1972மற்றும் 1976ஆகிய ஆண்டுகளில் அவர் தந்தை மிட்சுவோ, ஜப்பான் அணி சார்பில் தங்கப்பதக்கங்களை எடுத்திருந்தார்.

தந்தையைப் போலவே நயோயாவும் அணிசார்பில் பதக்கத்தைப் பெற்றுள்ளார். 2ஆம் உலகப்போருக்குப் பின்னர் ஒலிம்பிக்கில் தந்தையும் மகனும் பதக்கங்கள் பெற்றது இல்லை. இந்தப் பிரிவில் ஜப்பான் 1984க்குப் பிறகு தங்கம் பெறவில்லை. அக்குறையை நயோயா தீர்த்துள்ளார். 1960 காலப்பகுதி ஜப்பான் ஜிம்னாஸ்டிக் பொற்காலம் என்றே கூற வேண்டும். நயோயாவுக்கு 27 வயதாகிறது. கடந்த 11ஆண்டுகளாக இவரது தந்தைதான் அவருக்கு பயிற்சி அளித்து வந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ற-07)

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். -குறள்

வலம்புரி

# ஜனாதிபதியின் ஆவேசம் ஒன்றை இரண்டாக்கும்

நாட்டின் ஸ்திர நிலைக்கு ஆபத்து ஏற்படுமானால் விடுதலைப் புலிகளின் பகுதிகளுக்குள் இராணுவத்தை அனுப்புவேன் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த எச்சரிக்கை அவரின் சுய ரூபத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது. சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் ஆர்வமாக இருப்பதாகக் கூறிக்கொள்ளும் ஜனாதிபதி, இடையிடையே தனது வேடத்தை மறந்து உளறத்தொடங்கிவிடுகிறார்.

விடுதலைப் புலிகளை எச்சரிக்கை செய்து - அவர்களைப் பயமுறுத்தி அடிபணிய வைக்கலாம் என ஜனாதிபதி நினைப்பது மிகப்பெரும் தவறாகும். விடுதலைப் புலிகளின் பகுதிகளுக்கும் இராணுவத்தை அனுப்புவேன் என சர்வசாதாரணமாக ஜனாதிபதி கூறுவதானது ஒரு நாட்டின் தலைமைப் பதவியில் பொறுப்பற்ற ஒருவர் அமர்ந்துள்ளார் என்பதற்கு தகுந்த சான்றாகும்.

நோர்வேயின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி முயற்சிப்பாராயின், மேற்போந்த பொறுப்பற்ற வார்த்தைகளை அவர் மிக எளிதாகக் கூறமாட்டார்.

நாட்டின் ஸ்திர நிலைக்கு ஆபத்து ஏற்படுமாக இருந்தால் விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் படைகளை அனுப்புவேன் என அவர் கூறியிருப்பதைப் பார்க்கும்போது, இலங்கை முழுவதிலும் சிங்கள ஆட்சி நடப்பதுபோன்ற எண்ணத்தில் பேசியிருப்பது போல தோன்றுகின்றது.

ஆனால் உண்மைநிலை அதுவன்று. தமிழர் தாயகத்தின் பெரும்பகுதியை இன்று விடுதலைப் புலிகளே நிர்வகிக்கின்றனர். விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் இலங்கை ஜனாதிபதியாகிய சந்திரிகா குமாரதுங்க செல்வதாக இருந்தாலும் அதற்கான அனுமதியை விடுதலைப் புலிகளே வழங்கவேண்டும்.

அதுமட்டுமன்றி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமிழீழ நீதிமன்றம், தமிழீழ காவல்துறை, தமிழீழ வைப்பகம் என்பன இயங்குவதை ஜனாதிபதி மறந்துள்ளார் போலும்.

விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் ஊழலற்ற, பயமற்ற வாழ்வை மக்கள் பெற்றுள்ளனர். இந்த உண்மையை உணர்ந்த தென்னிலங்கைப் புத்திஜீவிகள் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தைப் பாராட்டியுள்ளனர்.

அதுமட்டுமன்றி, சர்வதேசத்தின் உயர் அமைப்புக்களான ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிப் பிராந்தியத்துக்குச் சென்று அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துகின்றன - அவர்களின் நிர்வாக முறைமையைக் கண்டு வியந்துள்ளன. இவற்றிற்கு மேலாக விமானப்படை, விமானத்தளம் என்பனவற்றையும் விடுதலைப்புலிகள் வைத்துள்ளனர் என இலங்கை விமானப்படைத் தளபதி கூறியுள்ளார்.

விமானப்படைத் தளபதியின் கூற்றை ஏற்றுக் கொண்ட விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தம்மிடமுள்ள விமானப்படையை - விமானத்தளத்தை ஞாபகப் படுத்தியமைக்காக விமானப்படைத் தளபதிக்கு நன்றியும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறாக இலங்கையில் தமிழீழம் என்ற பகுதி உருவாகிவருவதை உலகநாடுகளே ஏற்றுள்ளபோது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மட்டும் இலங்கையின் இறைமை பாதிக்கப்படுமாகவிருந்தால், விடுதலைப புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் படையினரை அனுப்புவேன் எனப் புலம்புகின்றார்.

உண்மையில் இலங்கையின் ஒருமைப்பாட்டை, ஸ்திரத் தன்மையை பாதுகாக்கவேண்டுமானால் தமிழர் தாயகத்திலுள்ள படைகளை அரசு உடனடியாக வாபஸ்பெற்று விடுதலைப் புலிகளுடன் இசைந்து போவதே ஒரே வழியாகும்.

வழி ஒன்றாக இருக்க, பயணம் வேறொன்றாக இருந்தால் இலங்கை இரண்டாகப் பிரிபடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# புங்குடுதீவில் வைத்தியசேவைப் பிரச்சினைகளுக்கு ஆளணிப் பற்றாக்குறையே காரணம்

## பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மக்கள் எதிர்கொள்ளும் சுகாதார வைத்திய சேவைகள் பிரச்சினைகள் தொடர்பாக மாகாண சுகாதார பணிமனை செயற்பாடுகள மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள நியாயமற்றவை என பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தா. சிவசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் புங்குடுதீவு மக்களால் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டமும், சமர்ப்பித்த மகஜர் சம்பந்தமாக வெளிவந்த செய்திகளும் எல்லாப் பகுதிகளிலும் சுகாதார சேவைகளை நெறிப்படுத்துபவர்களைப் பற்றி ஒரு தப்பபிப்பிராயத்தை மக்களிடையே ஏற்படுத்தி உள்ளது. எனவே உண்மை நிலைமை மக்களுககுத் தெரிவுபடுத்த வேண்டும்.

தறபொழுது யாழ் மாவட்டத்தில் உள்ள யதார்த்த நிலை மையை அறிந்தவர்கள் இங்கு சுகாதார சேவைகளை மேற் கொள்வதில் உள்ள சிரமத்தை உணர்வார்கள் அந்த வகையில் பெரும் பிரச்சினையாக உள்ளது.

ஆளணிப் பற்றாக்குறை முக்கியமாகப் பயிற்றப்பட்ட வைத்தியர்கள், உதவி வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், மருத்துவ மாதர்கள் மற்றும் மருந்தாளர்கள் உட்பட எல்லா வகையிலும் மிக அதிகமான பற்றாக்குறை எமது மாகாணத்தில் நிலவுகின்றது.

இதைவிட பிரதி மாகாணப் பணிபபாளருக்கு பக்கபலமாக இருக்க வேண்டிய தொற்று நோயியலாளர், தாய் சேய் நல வைத்திய அதிகாரிகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள எவருமே இல்லை. தனியொருவரே எல்லோருடைய வேலைகளையும் கவனிக்க வேண்டியுள்ளது.

அனைத்திற்கும் மேலாக வைததியசாலைகளில் வைததிய நிபுணர்கள்,வைத்தியர்கள் இப்பகுதியல் 88 பேராகிலும் இருக்க வேண்டிய இடத்தில் 7 பேரே உள்ளனர். இதனால் ஓய்வுபெற்ற பதில் வைத்திய அதிகாரிகளே இப்பகுதியில் உள்ள வைத்திய நிறுவனங்களை நடாத்துவதற்கு உதவுகின்றனர்.

இந் நிலையில் இவர்களைத் தனி ஒருவராகக் கண்காணித்து முழுமையான சேவையை வழங்க முடியாதுள்ளது.

இங்குள்ள பற்றாக்குறை பற்றி மேலிடத்திற்குப் பல முறை அறிவித்தும் இது குறிதது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இதனால் சுகாதார நிலைமையைப் பாதுகாப்பதற்கு முடியாதுளளது.

யாழ் மாவட்டத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்களும், யாழ். மாவட்டத்தில் சேவை செய்ய பின்னடிக்கின்றார்கள். இப்படியான ஒரு சூழ்நிலையில் யாழ். மாவட்ட சுகாதார சேவைகளை நடாத்த வேண்டிய பொறுப்பு எனது தலையில் சுமத்தப்பட்டிருக்கின்றது.

நான் இம் மாவட்டத்தில் கடநத பதினைந்து வருடங்களாக சேவை செய்கின்றேன். யாழ். மாவட்டத்திற்கு எங்கு என்ன தேவை என்பதை எனது உள்ளங்கைபோல் நான் அறிவேன். எனக்கு ஆர்ப்பாட்டம் செய்து தேவைகளை உணர்த்த வேண்டிய அவசியமில்லை.

இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அதிகாரிகள் மட்டத்தில் செய்ய வேண்டியவற்றைத் தொடர்ச்சியாக நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். ஆனால், அரசியல் மட்டத்தில் நடவடிக்கை எடுத்து இந்தப் பற்றாக்குறையை ஓரளவாவது நிவர்த்தி செய்தால் எல்லா நிறுவனங்களையும் மக்களுககுச் சேவை செய்யக் கூடிய வகையில் நல்ல முறையில் இயங்க வைப்பதற்கு என்னால் முடியும் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. (ற-ப)

# காணிக் கொள்வனவு, வாக்களிப்பு நடைமுறைகள் குறித்த சட்டமூலங்கள் நேற்று பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையில் காணிகளைக் கொள்வனவு செய்யும் வெளிநாட்டவர்களுக்கு 100சதவீத வரிவிதிப்பது சம்பந்தமான விதிகளையும் பிரமாணங்களையும் வழங்கும் நிதித் திருத்தச் சட்டமூலம் ஒன்றை நிதி அமைச்சர் சரத் அமுனுகம நேற்று பாராளுமன்றில் சமர்ப்பித்தார்.

வெளிநாட்டவாகள் இலங்கையில் காணிகளைக கொள்வனவு செய்யும் போது அவர்களுக்கு 100சதவீத வரி விதிப்பானது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில முதலீடு செய்வதைத் தடுப்பதாக அமையமாட்டாது என நிதி அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல் நடைமுறை குறித்த விசேட ஏற்பாடுகள் சட்டமூலமும் நேற்று நீதி அமைச்சர் மீ.ஜெ. ஜோன்செனவிரத்தினவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

தேர்தலில் வாக்களிப்பதற்குத் தேசிய அடையாள அட்டை அத்தியாவசியமானது என்பதை அமைச்சர் ஜோன் செனவிரத்தின அங்கு சுட்டிக்காட்டினார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப்ஹக்கீம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஆகியோர் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தேசிய அடையாள அட்டையை அவசியப்படுத்தும் அரசின நடவடிக்கையினால் சிறுபான்மை மக்கள் பெரும் பாதிப்புக்குளளாகின்றனரெனத் தெரிவித்தனர்.

இதேசமயம், ஜாதிகஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த நாடாளுமனற உறுப்பினர்கள் தேர்தலில் வாக்களிக்கத் தேசிய அடையாள அட்டை அவசியம் என்ற யோசனையை வரவேற்றுப் பேசினார்கள். (ற-க,60)

# நல்லூர் உற்சவத்தையொட்டிய வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்கவம் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளதை முன்னிட்டு இவ் ஆலயத்தைச் சூழவுள்ள வீதிகளில் போக்குவரத்து நடைமுறைகள் குறித்து யாழ். மாநகரசபையினால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் முக்கிய சந்திகளிலும் ஆலயத்திற்கு மிக அண்மையிலும் சாதாரண திருவிழா நாட்களில் அதிகாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் விசேட நாட்களில் அதிகாலை 3. 00 மணிமுதல் இரவு 10.00 மணிவரையும் வீதித் தடைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

பருத்தித்துறை வீதி, நல்லூர் குறுக்கு வீதிச்சந்தி- மாநகர சபை அலுவலகத்திற்கு முன்பாகவுள்ள வீதி, செட்டித்தெரு- செட்டித்தெரு ஒழுங்கைச்சந்தி, பிராமணக்கட்டுக்குளம், அரசடிச் சந்தி, சங்கிலியன் வீதி- கோவில் வீதிச்சந்தி, மாநகரசபை அலுவலகத்திற்கு அருகாமையிலுள்ள புதிய வீதி என்பவற்றிலும் தூர்க்கா மணிமண்டபம் முன்பாகவும், செட்டித்தெரு பருததித்துறை வீதிச்சந்தியிலும், நல்லை ஆதீனத்திற்கு முன்பாகவும்,நல்லை ஆதீனத்திற்கு பின்புறமாகவும், யு.என். எச்.சி.ஆர். அலுவலகத்திற்கு முன்பாகவும் வீதித்தடைகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

பிரதான வீதித்தடை முகாம்களில் தலா 2 பொலிஸார் வீதம் மாற்றொழுங்கு முறையில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அத்துடன், அனைத்து வீதித்தடை முகாம்களிலும் மாநகர சபையைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் வீதம் 6 பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவர். அவரே அத்தடை முகாமிற்கு இணைபபாளராகவும் பணியாற்றுவார்.

வீதித்தடைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வதியும் பொது மக்களின வாகனங்களுக்கு தடை முகாம்களூடாகச் செல்வதற்கு அனுமதி அட்டை வழங்கப்படவுள்ளது.

உற்சவகாலத்தில் முத்திரைச்சந்திப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியில்750, 751 அச்சுவேலிப் பேருந்துகள், மினிவான்கள் நிறுத்தப்படுவதுடன் கந்தர் மடச்சந்திக்கு அப்பால் அரசடி வீதியிலும்,அம்மன் வீதி பருத்தித்துறைச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியிலும், தென்மராட்சிக்குச் செல்லும் வாகனங்கள் செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பாலும், தனியார் வாகனங்கள் யாவும் செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பாலும் வாகனங்கள் தரித்து நிறுதத்தப்படல் வேண்டும்.

பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள அனைத்தும் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி- நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தி ஊடாகச் செல்லுதல் வேண்டும். (ற)

# சின்னபாலாவின் இறுதிக் கிரிகை இன்று

(கொழும்பு)

கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)யின் மூத்த உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான சின்னபாலா (கந்தசாமிஐயர் நடராஜாஐயர்) வின் இறுதிக் கிரிகைகள் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

பொரளை இந்து மயானத்தில் நடைபெறவுள்ள இறுதிக் கிரிகை நிகழ்வில் கட்சியின் ஆதரவாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், அரசியல் பிரமுகர்கள் எனக் பலர் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-க)


## சாயி அருளமுதம்



எல்லா இதயங்களும் அவருடைய சொத்துக்களே. அவையாவும் அவருடைய ஆட்சிக்கு உட்பட்டவைதான். ஆயினும் முழுப் பிரதேசமும் தமக்குச் சொந்தமானதாயிருப்பினும் அதில் சுத்தமாக இருக்கும் இடத்தில் மட்டுமே ஒரு ஜமீன்தார் உட்காருவது போல இறைவனும் சுத்தமாக்கப்பட்ட இதயத்திலேயே எழுந்தருளியிருப்பார். "பக்த யத்ரா காயத்தே தத்ர திஸ்டாமி நாரத" "எங்கு பக்தர்கள் என்னைப் பாடுகினறனரோ அங்கே நான் எழுந்தருளுவேன்"

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

## மண்டைதீவில் மஹோற்சவம்

மண்டைதீவு திருவெண்காடு திருவருள் மிகு சித்திவிநாயகர் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

13 வருடங்களிற்குப் பின்னர் இவ் ஆலயத்தில் நாளை மகோற்சவம் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 28 ஆம் திகதி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேரில் சித்திவிநாயகப் பெருமான் எழுந்தருளவுள்ளார்.

இதேவேளை கடந்த வருடமே இவ்வாலயத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

### பொலிஸ்...

தேடுதல் இடம்பெற்றதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் ஆயுதங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

பதிவுசெய்யப்படாத மோட்டார் சைக்கிள் ஒன்று வீடொன்றிலிருந்து பொலிஸாரால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் படுகொலைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுவர் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

### ஜனாதிபதி...

சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், அதிகாரத்தோரணையில் மிடுக்கான அபகீர்த்திப் பதில்கள் சமாதான முயற்சிகளை பாதித்து, இலங்கையில் மீண்டும் போரை ஏற்படுத்தும் அபாய நிலைக்கு தள்ளிவிடுமென்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சமாதான முயற்சிகளின் பிரதான பங்காளிகளான அரசும், விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் நல்லுறவின் அடிப்படையில் நம்பிக்கையூட்டும் கருத்துப் பரிமாற்றத்தாலேயே சமாதானத்தை உருவாக்க முடியுமென்றும் அவ் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (இ-7,6)

## வருடாந்த அலங்கார உற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் குமரகோட்டம் சித்தி வைரவர் அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 27 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 28 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

அத்துடன் எதிர்வரும் செப்டெம்பர் முதலாந் திகதி ஆயிரத்தெட்டு சங்காபிஷேகத்தோடு உற்சவம் நிறைவுபெறும். (ந-7)

# குளிசை வடிவில் போதைப் பொருள் கொழும்பு நகரில் விற்பனை

(கொழும்பு)

கொழும்பு மாநகரத்தில் குளிசைவடிவில் போதைப பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாரின் போதைவஸ்து தடுப்புப் பணிமனை தெரிவித்துள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 'பாபுல்' என அழைக்கப்படும் இப்புதிய வடிவிலான போதைப் பொருட்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் சென்று விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இதனால், இது குறித்துப் பொதுமக்களை மிக விழிப்பாக இருக்குமாறு போதைவஸ்துத் தடுப்புப் பணிமனை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கொழும்பில் நடைபெறும் களியாட்ட நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் பல இளைஞர்களும், யுவதிகளும் இந்தப் புதிய வடிவிலான போதைப்பொருளையே பாவிப்பதாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ந-க,60)


சைவ வித்தியா விருத்திச் சங்கம்

கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறைவாழ்வு இல்லச் சிறார்களினால் தைக்கப்பட்ட ஆடைகளும், உருவாக்கப்பட்ட கைப்பணிப் பொருட்களும் 20.08.2004 தொடக்கம் 22.08.2004 வரை தினமும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 வரை சங்க மண்டபத்தில் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்படுகின்றன.

காண வாருங்கள்

இல்லச்சிறார்களுக்கு ஊக்கம் தாருங்கள்

கலாசாலை வீதி,
திருநெல்வேலி பணிப்பாளர் சபை.

விளம்பர அனுசரணை:
கபிலா காலணியகம்
24 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
T.P 222 3097 COLOMBO T.P - 4612736
(8747)


## இதய அஞ்சலி



### தோழர் பாலா

(கந்தசாமி ஐயர் பாலநடராஜா ஐயர்)

தமிழ் சமூகத்தின் விடிவிற்காக சுமார் 30 ஆண்டுகள் அயராது பாடுபட்டு கடந்த 16.08.2004 அன்று படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரும், முன்னாள் ஈரோஸ் இயக்க முக்கியஸ்தரும், முன்னாள் வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரசார செயலாளருமான தோழர் பாலா அவர்களுக்கு எமது இதய அஞ்சலியை உரித்தாக்குகிறோம்.

அவரது இழப்பால் துயரடைந்திருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நண்பர்கள்

ஈ.பி.ஆர்.எல்.எவ் (E.P.R.L.F)

(C/414)

## கண்ணீர் அஞ்சலி



### தோழர் பாலா

(கந்தசாமி ஐயர் பாலநடராஜா ஐயர்)

ஈழமண்ணில் விளைந்த முத்தே
போராளியானாய் ஈரோஸ் அமைப்பில்
மண்ணுடனும் மக்களுடனும் இணைந்தே
மகத்தான கருத்துக்களின் உறைவிடமாய்
மரணம்வரை வாழ்ந்திருந்தாய்
ஏகத்திற்காக எக்காளம் இடுபவர்களுக்கே
நீயும் இரையானாய்
நீ பற்றுக்கொண்ட மண்ணிலும், மக்களிடமும்
உன் பெயர் நிலைத்திருக்கும்
அதை யாராலும் அழித்துவிட முடியாது

(C/413) முன்னாள் ஈரோஸ் போராளிகள்


யாழ். வணிகர் கழகம் நடாத்தும்

மாபெரும் யாழ் வர்த்தகக் கண்காட்சி 2004

ஆகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள், கல்வி அறிவியல் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றிப் பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

(C/405)